بسم الله الرحمن الرحیم　　نحمدہ ونصلی علیٰ رسولہ الکریم　　وعلیٰ عبدہ المسیح الموعود

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 1

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

வாராந்திர பத்திரிகை

# பதர்

காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 7

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

13 ரஜப் 1437 ஹிஜ்ரி கமரி 21 ஏப்ரல் 2016

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பிநஸ்ரிஹில் அஸீஸ் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல-னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**நபி இறைவனின் வடிவத்தைப் பார்ப்பதற்கான கண்ணாடியாக இருக்கின்றார். இந்த கண்ணாடியின் மூலமாக இறைவனின் முகம் தென்படுகின்றது.**

# வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

இறைவனின் இருப்பைப் பற்றி தெரிவிப்பவர்களும், அவன் ஒருவன்; அவனுக்கு இணை இல்லை என்பதைப் பற்றிய அறிவை மக்களுக்கு கற்றுக் கொடுப்பவர்களும் நபிமார்கள் மட்டுமே ஆவர் என்பதும் நினைவில் இருக்க வேண்டும். இந்த புனித மக்கள் உலகில் வராமல் இருந்தால் நேர்வழியை உறுதியாக பெற்றுக் கொள்வது ஒரு சாத்தியமற்ற விஷயமாக இருக்கும். வானம், பூமி ஆகியவற்றைப் பற்றி சிந்தித்து அவற்றின் சீரான அமைப்பு மற்றும் அவற்றின் உறுதித்தன்மை ஆகியவற்றின் மீது பார்வையைச் செலுத்தி நல்லியல்புள்ள, நல்லறிவு படைத்த மனிதனால் இந்த நுட்பமான விஷயங்கள் நிறைந்த பிரபஞ்சத்தை உருவாக்குபவன் யாராவது கண்டிப்பாக இருக்க வேண்டும் என்ற இந்த சொற்றொடருக்கும், உண்மையிலேயே இருக்கின்றான் என்ற இந்த சொற்றொடக்கும் இடையில் மிகப்பெரும் வித்தியாசம் இருக்கின்றது. உண்மையிலேயே அவன் இருக்கின்றான் என்பதைப் பற்றி தெரிவிப்பவர்கள் நபிமார்கள் அலைஹிமுஸ்ஸலாம் மட்டுமே ஆவர். அவர்கள் ஆயிரக்கணக்கான அடையாளங்கள் மற்றும் அற்புதங்கள் மூலமாக மறைவிலும் மறைவாகவும் அனைத்து ஆற்றல்களையும் தன்னகத்தே கொண்டவனாகவும் இருக்கின்ற அந்த இறைவன் உண்மையிலேயே இருக்கின்றான் என்பதை உலகிற்கு நிரூபித்துக் காட்டியுள்ளனர். உண்மை என்னவென்றால், உலகின் அமைப்பைப் பார்த்து உண்மையான படைப்பாளனின் தேவையை அறிந்து, உணர்ந்து கொள்கின்ற இந்தத் தகுதியிலுள்ள அறிவும் கூட நபித்துவத்தின் ஒளிக்கதிர்களிலிருந்து கிடைத்த அறிவேயாகும். நபிமார்கள் அலைஹிமுஸ்ஸலாம் இல்லாமல் இந்த அளவு அறிவு கூட எவருக்கும் கிடைத்திருக்காது. இதற்கான உதாரணம் இதுவாகும். அதாவது, பூமிக்கு அடியில் தண்ணீர் இருந்தாலும் கூட அந்த தண்ணீர் எஞ்சியிருப்பதும் நிலைத்திருப்பதும் விண்ணிலுள்ள தண்ணீருடன் தொடர்புடையதாக இருக்கின்றது. சில நேரங்களில் இவ்வாறும் நடக்கின்றது. அதாவது வானத்திலிருந்து மழை பொழியாமல் இருந்தால் பூமியின் தண்ணீர் கூட காய்ந்து விடுகின்றது. விண்ணிலிருந்து மழை பொழியும் போது பூமியிலும் தண்ணீர் பொங்கி எழுகின்றது. இவ்வாறே நபிமார்கள் அலைஹிமுஸ்ஸலாமின் வருகையினால் அறிவுகள் கூர்மையாகி விடுகின்றன. பூமியின் நீராக இருக்கின்ற அறிவு தனது நிலையில் முன்னேற்றம் அடைகின்றது. பிறகு எந்த நபியும் அனுப்பப்படாமல் ஒரு நீண்ட காலம் கழிந்ததும், பூமியின் தண்ணீரான அறிவுகள் அழுக்கடைந்து குறைய ஆரம்பித்து விடுகின்றது. உலகில் சிலை வணக்கம், இறைவனுக்கு இணைவைத்தல் மற்றும் எல்லா வகையான தீமைகளும் பரவி விடுகின்றன. எனவே, எவ்வாறு கண்ணில் ஒளியிருந்தும் கூட சூரியனின் தேவை அதற்கு இருக்கின்றதோ அவ்வாறே கண்ணுக்கு ஒப்பாக இருக்கின்ற உலகின் அறிவுகள் எப்போதும் நபித்துவம் எனும் சூரியனின் தேவையுடையதாக இருக்கின்றது. எப்போது அந்த சூரியன் மறைந்தாலும் அவற்றில் உடனடியாக மாசும் இருளும் உருவாகி விடுகின்றன. உங்களால் கண்ணால் மட்டும் எதையாவது பார்க்க முடியுமா என்ன? ஒருபோதும் முடியாது. இவ்வாறே நபித்துவத்தின் ஒளி இல்லாமல் எதையும் உங்களால் பார்க்க முடியாது.

எனவே, தொன்றுதொட்டே உலகம் உருவாகிய நாளிலிருந்து இறைவனை அடையாளங்கண்டு கொள்வது நபியை அடையாளங்கண்டு கொள்வதுடன் தொடர்புடையதாக இருந்தால் நபியின் வழியில்லாமல் ஏகத்துவம் கிடைப்பதும் சாத்தியமற்றதும் நடக்காத ஒன்றுமாகும். நபி இறைவனின் வடிவத்தைப் பார்ப்பதற்கான கண்ணாடியாக இருக்கின்றார். இந்தக் கண்ணாடியின் மூலமாக இறைவனின் முகம் தென்படுகின்றது. இறைவன் தன்னைத்தானே உலகத்திற்கு வெளிப்படுத்திக் காட்ட விரும்பும் போது அவனது வல்லமைகளின் தோற்றமாக இருக்கின்ற நபியை உலகில் அனுப்புகின்றான். தனது வஹியை அவர் மீது இறக்குகின்றான். தனது படைத்தோம்பலின் ஆற்றல்களை அவர் மூலமாக காட்டுகின்றான். அப்போது இறைவன் இருக்கின்றான் என்பது உலகிற்கு தெரிய வருகின்றது. எனவே, எவர்களின் இருப்பானது இறைவனின் தொன்றுதொட்டு இருந்து வருகின்ற, மாறாத சட்டத்தின் அடிப்படையில் இறைவனை அடையாளங்கண்டு கொள்வதற்கான வழியாக நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றதோ அவற்றின் மீது ஈமான் கொள்வது ஏகத்துவத்தின் ஒரு பகுதியாகும். இது இல்லாமல் ஏகத்துவம் முழுமையாக முடியாது. ஏனென்றால், நபிமார்கள் காட்டுகின்ற, இறைஞானம் வரை கொண்டு செல்கின்ற அந்த வானத்தின் அடையாளங்களும் வல்லமைகளும் வெளிப்படுத்துகின்ற வியக்கத்தக்க விஷயங்களும் இல்லாமல் எப்போதும் முழுமையான உறுதித்தன்மை மூலம் உருவாகின்ற அந்த கலப்பற்ற ஏகத்துவம் கிடைக்காது. அந்த ஒரு சமுதாயம்தான் இறைவனை காட்டக் கூடியதாக இருக்கின்றது. அவர்கள் மூலமாக நுட்பத்திலும் நுட்பமாகவும், மறைவிலும் மறைவாகவும் இருக்கின்ற அந்த இறைவன் வெளிப்படுகின்றான். மேலும் எப்போதும் இறைவன் என்ற பெயரிலுள்ள அந்த மறைவான கருவூலம் நபிமார்கள் மூலமாகவே அடையாளங்கண்டு கொள்ளப்பட்டிருக்கின்றது. அவ்வாறல்லாமல் இறைவனது பார்வையில் செயலின் சாயல் முழுமையான முறையில் படிந்திருக்கின்ற அந்த ஏகத்துவம் நபியின் மூலமாக அல்லாமல் கிடைக்கும் என்பது எவ்வாறு அறிவிற்கு எதிரானதாக இருக்கின்றதோ அவ்வாறே இறைநெருக்கம் பெற்றவர்களின் அனுபவத்திற்கும் அது எதிரானதாக இருக்கின்றது.

(தொடர்ச்சி 7-வது பக்கம்)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

பெற்றோர்கள் தமது குழந்தைகள் தவறு செய்யும் போது அளவில்லாமல் கடுமையான தண்டனை தருகின்றனர். சிலரோ குழந்தைகள் தவறு செய்யும் போது எந்த அளவுக்கு கண்டும் காணாமல் நடந்து கொள்கின்றனர் என்றால், குழந்தைகளுக்கு நல்லது கெட்டதைப் பிரித்தறியும் தன்மையே அழிந்து போய் விடுகிறது. இந்த இரு விஷயங்களும் குழந்தைகளின் தர்பிய்யத்தில் தவறான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

குறிப்பாக தந்தையர்கள் குழந்தைகளின் தர்பிய்யத்தில் இந்த விஷயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும். எங்கு மென்மை காட்ட வேண்டும்? எங்கு கடுமை காட்ட வேண்டும்? எவ்வாறு புரிய வைக்க வேண்டும்? என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இது தந்தையர்களின் கடமையாகும். இதனை தாய்மார்களிடம் மட்டுமே விட்டு விடக்கூடாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் அன்னாரது கலீஃபாக்களின் புகைப்படங்களைப் பயன்படுத்துவது தொடர்பாக அவசியமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஹுஸூர் அவர்கள் வலியுறுத்திக் கூறினார்கள்.

பித்அத்துகளை அகற்றுவதற்காகவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் வந்தார்கள். ஓர் அஹ்மதி பித்அத்துகளுக்கு எதிராக அறப்போர் செய்ய வேண்டும்.

அறிவு சம்பந்தப்பட்ட விஷயத்தில் கருமித்தனம் காட்டக் கூடாது. அதனை பரப்ப முயற்சி செய்ய வேண்டும்.

சில அவசரக்காரார்கள் சில வேளையில் சிறிதும் சிந்திக்காமல் கொள்ளாமல் ஆட்சேபனை செய்து விடுகிறார்கள். நமது நண்பர்கள் அதிலிருந்து விலக வேண்டும்.

நோயாளிகளிடம் உண்மை மற்றும் சத்தியத்தின் தாக்கம் விரைவாக ஏற்படுகின்றது. மருத்துவர்கள் நோயாளிகளுக்கு தப்லீக் செய்ய வேண்டும். இவ்வாறு அவர்கள் மார்க்கத்திற்கு தொண்டு செய்ய முடியும்.

இமாமின் குரலுக்கு எதிரில் தனி நபர்களின் குரல் ஒன்றுமே இல்லை. இறைவனது ரஸூலுடைய குரல் உங்கள் காதுகளில் விழுந்தால் உடனே அதற்கு பதில் அளியுங்கள். அது உங்கள் மீது கடமையாகும். அதனை செயல்படுத்த முயற்சி செய்யுங்கள். இதிலேயே உங்கள் முன்னேற்றத்தின் இரகசியம் உள்ளது.

அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்ப நடந்தவாறு மக்களை மகிழ்விப்பதற்காக மட்டும் வேலை செய்யக் கூடாது.

சிரியாவைச் சார்ந்த மதிப்பிற்குரிய அப்துந் நூர் ஜாபி சாஹிப் வஃபாத் ஆகி விட்டார்கள். மர்ஹூமின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு ஜனாஸா காயிப் தொழுகை நிறைவேற்றப்பட்டது.

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 18 மார்ச் 2016 அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 –ஆம் ஆண்டு அமான் மாதம் 18 –ஆம் தேதி ஆற்றிய ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۔ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۔ اِيَّاكَ نَعْبُدُ

وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۔ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۔

பெற்றோர்கள் தமது குழந்தைகள் தவறு செய்யும் போது அளவில்லாமல் கடுமையான தண்டனை தருகின்றனர். சிலரோ குழந்தைகள் தவறு செய்யும் போது எந்த அளவுக்கு கண்டும் காணாமல் நடந்து கொள்கின்றனர் என்றால், குழந்தைகளுக்கு நல்லது கெட்டதைப் பிரித்தறியும் தன்மையே அழிந்து போய் விடுகிறது. இந்த இரு விஷயங்களும் குழந்தைகளின் தர்பிய்யத்தில் தவறான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

அதிகமான கடுமை, காரணமின்றி ஆதாரமில்லாமல் ஒவ்வொரு விஷயத்திலும் தடுத்தல் ஆகியவை குழந்தைகளைக் கிளர்ச்சி செய்ய வைத்து விடுகிறது. பிறகு அவர்கள் ஓரளவு வயது கடந்த பிறகு அனுமதிக்கப்பட்ட விஷயத்தையும் கூட பொருட்படுத்துவதில்லை. இவ்வாறு குழந்தைகளுடன் ஒவ்வொரு விவகாரத்திலும் அனுமதியற்ற ஒருதலைப்பட்சமாக நடந்து கொள்ளுதல், நான் கூறியது போன்று குழந்தைகளின் இயல்பில் தீய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. குறிப்பாக சிறு வயதிலிருந்து வாலிப வயதை நோக்கி அடி எடுத்து வைக்கும் சிறுவர்களிடம் தீய தாக்கத்தை ஏற்படுகிறது. பெற்றோரின் நடைமுறை அவர்களைச் சீரழிய வைத்து விடுகிறது.

எனவே, அத்தகைய வயதில் குழந்தைகளுக்குப் புரிய வைப்பதற்காக ஆதாரத்துடன் பேச வேண்டும். குறிப்பாக குழந்தைகளிடம் அவர் தம் சுற்றுப்புறச் சூழ்நிலையின் அளவில் மட்டுமின்றி, முழு நாட்டிலும் இன்னும் சொல்வதாயின், அதனை விட அதிகமாக முழு உலகிலும் தாக்கமும் ஏற்படுகிற இக்காலத்தில் குறிப்பாக தந்தையர்கள் குழந்தைகளின் தர்பிய்யத்தில் இந்த விஷயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும். எங்கு மென்மை காட்ட வேண்டும்? எங்கு கடுமை காட்ட வேண்டும்? எவ்வாறு புரிய வைக்க வேண்டும்? என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இது தந்தையர்களின் கடமையாகும். இதனை தாய்மார்களிடம் மட்டுமே விட்டு விடக்கூடாது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் எவ்வாறு தர்பிய்யத் வழங்கினார்கள் என்றவொரு சம்பவத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் எடுத்துரைக்கிறார்கள். எந்த விஷயங்கள் அனுமதிக்கப்பட்டவை எவை தய்யிப் (தூய்மை) ஆனவை என்பதை விவரிக்கிறார்கள்:

நினைவில் கொள்ள வேண்டும். அல்லாஹ் பல்வேறு மிருகங்களை பல்வேறு நோக்கங்களுக்காக படைத்துள்ளான். சிலவற்றை அழகிற்காக – பார்க்கும் போது அழகு தென்படுகிறது. சிலவற்றை குரலுக்காக – அவற்றின் குரல் மிக நன்றாக இருக்கிறது. சிலவற்றை உணவுக்காக – அவற்றின் மாமிசம் நன்றாக இருக்கின்றன. சில மருந்துக்காக – அவற்றில் நோய்களிலிருந்து உடல்நலம் தரும் சக்தி இருக்கிறது. எனவே, ஓர் உயிரினம் ஹலாலா என்று மட்டும் பார்த்து உண்டுவிடக் கூடாது. ஒரு மிருகத்தின் மாமிசம் உடல்நலத்திற்கு கேடு விளைவிக்காததாக இருக்கலாம். ஆனால், அவை தாவரங்களுக்கும் மனிதனுக்கும் கேடு விளைவிக்கும் புழுக்களை உண்ணக் கூடியவையாக இருக்கின்றன. எனவே, சில வகை பறவைகள் ஹலால் ஆக இருந்தாலும் அரசு தரப்பிலிருந்து அவற்றைக் கொல்வது தடை செய்யப்பட்டிருக்கின்றது. பாகிஸ்தானிலும் தடை இருக்கின்றது. ஏனெனில் அவை பயிர்களின் புழுக்களை உண்பவையாக இருக்கின்றன.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: சில (உண்ணும்) மாமிசமாக இருக்கின்றன. மாமிசம் என்ற வகையில் ஹலால் ஆகவும் இருக்கின்றது. தூய்மையாகவும் இருக்கின்றது. இருந்தும் கூட மனித குலத்தின் பொதுவான பயனைப் பார்க்கும் போது அம்மாமிசம் தூய்மையாக இருப்பதில்லை. ஆக, ஹலால் ஆகவும் இருக்கிறது; தூய்மையாகவும் இருக்கின்றது. எனினும், பார்க்க வேண்டிய விஷயமாவது யாருக்கு அதனால் அதிக பயன் கிடைக்கிறது என்பதாகும். தமது பயனை விட மனித குலத்தின் பயனிற்கு முன்னுரிமை தர வேண்டியது வருகிறது. ஏனெனில் அவற்றை உண்பதால் மனிதன் வேறு சில பயன்களிலிருந்து தடுக்கப்பட்டு விடுகிறான்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எனக்கு சிறு வயதிலேயே அந்தப் பாடம் கற்பிக்கப்பட்டது. நான் சிறு வயதில் ஒருமுறை ஒரு கிளியை வேட்டையாடிக் கொண்டு வந்த போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் அதனைப் பார்த்து விட்டு கூறுகின்றார்கள்: மஹ்மூது! இந்த மாமிசம் ஹராம் இல்லைதான். ஆனால் அல்லாஹ் எல்லா மிருகங்களையும் உண்பதற்காகப் படைக்கவில்லை. சில அழகிய உயிரினங்கள் பார்ப்பதற்காகப் படைக்கப்பட்டுள்ளன. சில விலங்குகளுக்கு அவன் அழகிய குரலை வழங்கியுள்ளான். அவற்றின் குரலைக் கேட்டு காதிற்கு இன்பம் கிடைப்பதற்காக அவற்றை படைத்துள்ளான்.

ஆக, அல்லாஹ் மனிதனது எல்லாப் புலன்களுக்கும் அருளை வழங்கியுள்ளான். அவை அனைத்தையும் எடுத்து நாவிற்கே தந்து விடக் கூடாது. அதாவது, தனது நாவின் சுவைக்காக எல்லா மிருகங்களையும் அறுத்து உண்பது அவசியமில்லை. அவற்றின் பிற பயன்களையும் பார்க்க வேண்டும். வெறும் உணவிற்கான இன்பத்தை மட்டும் அதிலிருந்து பெறக் கூடாது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களிடம் கூறுகின்றார்கள்: பாருங்கள்! இந்த கிளி என்ன அழகான உயிரினமாக இருக்கிறது. அது மரத்தில் அமர்ந்திருப்பது பார்ப்பவர்களுக்கு எவ்வளவு அழகாக இருக்கும்? (த.்ப்ஸீரே கபீர் தொகுதி 4, பக்கம் 263)

ஆக, இது அன்னாரின் அழகிய தர்பிய்யத்தின் முறையாகும். இது உள்ளத்தில் மட்டும் தாக்கத்தை ஏற்படுத்துவது அல்லாமல் அல்லாஹ்வின் இந்த கட்டளையையும் மனதில் அமர்த்தக் கூடியதாகும். ஹலால் மற்றும் தூய்மையானதை உண்ணுங்கள். ஆனால், அதிலும் கூட எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அல்லாஹ் ஹலால் உண்ணுமாறும் கட்டளையிட்டுள்ளான். தூய்மையானதை உண்ணுமாறும் கட்டளையிட்டுள்ளான். தய்யிப் – தூய்மை என்பதன் விளக்கம் சில இடங்களில் தருணங்களுக்கேற்ப மாறுபடுகிறது. எனவே, எந்தவோர் உயிரினம் அல்லது பறவை பிற பயனுள்ள பணிகளில் பயன்படுகின்றதோ அல்லது வேறிடத்தில் பயன்பட்டுக் கொண்டிருக்கிறதோ அவற்றில் சில ஹலால் ஆக இருந்த போதிலும் தூய்மையாக இருக்காது. எவ்வாறிருப்பினும் அவற்றின் பயன் பிற இடங்களில் அதன் மாமிசத்தை உண்பதை விட அதிகமாக இருக்கின்றது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் விளக்கியுள்ள வேறு சில சம்பவங்களையும் எடுத்து வைக்கிறேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பித்அத் – நூதனங்களைக் களையவும் இஸ்லாத்தின் அழகிய போதனையைக் காட்டவும் வந்தார்கள். இது அன்னாரது வருகையின் நோக்கமாக இருக்கின்ற போது அன்னாரின் வாழ்வில் பித்அத்தைப் பரப்பும் ஒரு விஷயம் இருப்பது எப்படி சாத்தியமாகும்? நவூதுபில்லாஹ்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஒரு சம்பவத்தைக் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது புகைப்படம் ஒன்றை எடுக்க வைத்தார்கள். ஆனால் அவர்களிடம் ஒரு கார்டு முன் வைக்கப்பட்டது. அந்த தபால் கார்டில் அன்னாரது நிழற்படம் இருந்தது. அப்போது அன்னார், இதற்கு அனுமதி தர முடியாது என்று கூறினார்கள். மேலும் ஜமாஅத்திற்கு வழிகாட்டினார்கள். இத்தகைய ஒரு கார்டை யாரும் வாங்க வேண்டாம். அதன் விளைவாக, அதன் பிறகு எவரும் அவ்வாறு செய்யத் துணியவில்லை. (குத்பாத்தே மஹ்மூது தொகுதி 14, பக்கம் 214) தற்காலத்தில் சில இடங்களில் டுவிட்டர், வாட்ஸ்அப்பில் பார்த்து அதிலிருந்து கார்டில் எடுத்து பரப்ப முயற்சி செய்கின்றனர். ஏதாவது காலத்தில் பழைய காலத்தில் உள்ளதை அல்லது தமது பெரியவர்களிடமிருந்து வாங்கியதை அல்லது ஏதாவது கடைகளிலிருந்து அல்லது புத்தகக் கடைகளில் வாங்கி அதை பரப்புவது தவறான நடைமுறையாகும். அதனை நிறுத்த வேண்டும். அன்னார் நிழற்படம் எடுத்ததன் நோக்கம் தொலைதூர மக்கள் குறிப்பாக ஐரோப்பியர்கள் முகங்களை அடையாளம் காணக்கூடியவர்களாக இருக்கின்றனர். அவர்கள் நிழற்படம் பார்த்து உண்மையைத் தேடுவார்கள். அதற்காக முயற்சி செய்வார்கள். ஆனால் கார்டில் ஃபோட்டோவை அச்சிட்டு அதனை ஒரு தொழிலாக ஆக்குகிறார்கள் என்பதை உணர்ந்த போது, இந்த பித்அத் பரவி விடக்கூடாது என்பதற்காக அவர்கள் அதனை கடுமையாக தடுத்து விட்டார்கள். இன்னும் சொல்வதாயின், சில இடங்களில் அதனை அழித்து விடுமாறும் கூறினார்கள்.

எனவே, நிழற்படம் எடுக்கும் தொழில் செய்பவர்கள் விற்பவர்கள் அதிகமான விலையையும் வைக்கிறார்கள். அவர்கள் கவனம் செலுத்த வேண்டும். இன்னும் சிலர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நிழற்படத்தின் மீது வண்ணமிடுகின்றனர். ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது காலத்தில் கலர் ஃபோட்டோ எங்கும் இல்லை. இதுவும் முற்றிலும் தவறான விஷயமாகும். இதிலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அதுபோன்று கலீஃபாக்களின் ஃபோட்டோக்களை தவறாகப் பயன்படுத்துவதிலிருந்தும் விலகி இருக்க வேண்டும். ஒருமுறை சினிமா பயாஸ்கோப் பற்றிய ஓர் ஆலோசனைக் கூட்டத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களது முன்பு விவாதம் நடைபெற்றது. அப்போது அன்னார் கூறினார்கள். சினிமா அல்லது பயாஸ்கோப் அல்லது ஃபோனாகிராஃப் அதனை சுயமே தீமையாகும் என்று கூறுவது சரியல்ல. ஃபோனோகிராஃப் ஆகியவற்றை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களே கேட்டுள்ளார்கள். அதில் தாமே ஒரு நஸ்ம் எழுதவும் செய்து வாசிக்கச் செய்தார்கள். தாமும் அதனை கேட்டார்கள். பிறகு இங்குள்ள இந்துக்களை அழைத்து அதனைக் கேட்கவும் செய்தார்கள். அதிலுள்ள ஒரு கவிதை வரியாவது,

*குரல் வருகிறது இந்த ஃபோனோகிராஃபிலிருந்து;*
*தேடுங்கள் இறைவனை உள்ளத்தால்,*
*வீண் பேச்சால் அல்ல.*

எனவே, சினிமா தன்னளவில் ஒரு தீமையன்று. மக்கள் பெரும் கேள்வி எழுப்புகின்றனர். அங்கு செல்வது பாவமன்று. மாறாக இக்காலத்தில் அதன் வடிவம் நல்லொழுக்கத்திற்கு எதிரானதாக உள்ளது. ஒரு படம் தெளிவான முறையில் தப்லீக் சம்பந்தமாகவோ கல்வி சம்பந்தமாகவோ இருப்பின் அதில் கேளிக்கையின் அம்சம் இல்லையென்றால் அதில் எந்தத் தவறும் இல்லை. அது வெறும் கேளிக்கையான நாடகமாக இருக்கக் கூடாது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: கேலி என்பது தப்லீகில் கூட அனுமதிக்கப்பட்டது அல்ல. அது தவறான நடைமுறையாகும். (மஜ்லிஸே முஷாவரத்தின் அறிக்கை 1993 ஆம் ஆண்டு, பக்கம் 86) இந்த விஷயத்தை நினைவில் கொள்ள வேண்டும். M.T.A –வில் சில நிகழ்ச்சிகளில் இசை இருந்தால் அதில் தவறில்லை அல்லது Voice of Islam என்ற வானொலி தொடங்கப் –பட்டுள்ளது. அதில் இசை வந்தாலும் தவறில்லை என்று கூறுபவர்கள் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும். பித்அத்துகளை அகற்றுவதற்காகவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வந்தார்கள். நாம் நமது சிந்தனைகளை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நோக்கத்தின் பக்கம் செலுத்த வேண்டும். புதிய கண்டுபிடிப்புகளிலிருந்து பயன் பெறுவது ஒன்றும் ஹராமுமில்லை; பித்அத்தும் இல்லை. ஆனால் அவற்றை தவறாகப் பயன்படுத்துவது பித்அத்தை உருவாக்கி விடுகிறது. நாடக வடிவில் தப்லீக் நிகழ்ச்சிகள், தர்பிய்யத் நிகழ்ச்சிகளை அமைத்தால் தாக்கம் ஏற்படும் என்று சிலர் ஆலோசனை வழங்குகிறார்கள். அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். ஏதாவது தவறான ஒரு விஷயத்தை உங்கள் நிகழ்ச்சியில் நுழைப்பீர்கள் என்றால் அதில் நூற்றுக்கணக்கான பித்அத்துகள் சிறிது காலத்திற்குப் பிறகு தாமாகவே நுழைந்து விடும். பிறரது கருத்தின்படி, திருக்குர்ஆனைக் கூட இசையோடு சேர்த்து படிப்பது அனுமதிக்கப்பட்டதாக உள்ளது. ஆனால் ஓர் அஹ்மதி பித்அத்துகளுக்கு எதிராக அறப்போர் செய்ய வேண்டும். அந்த விஷயங்களிலிருந்து விலக வேண்டும். அதற்காக மிகவும் முயற்சி செய்ய வேண்டும்.

ஓர் அஹ்மதி அல்லாதவர் ஒரு பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதினார். அது நகைச்சுவைதான். அது ஒரு மவ்லவி சாஹிபின் அறியாமையை வெளிப்படுத்துகிறது. ஆனால் அத்துடன் இவர்களின் சிந்தனைப் போக்கையும் அறிய முடிகிறது. அவர்கள் எந்த விஷயங்களையெல்லாம் அனுமதிக்கப்பட்டவையாக ஆக்கிக் கொண்டு விட்டனர்!

எழுதக் கூடியவர் எழுதுகிறார்: ஓரிடத்தில் ஓர் அரபி இசைக் குழுவினர் பாட்டு பாடினர். மவ்லவி சாஹிபும் அங்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தார். அவர் தலையை அசைத்தவாறு அதை இரசித்துக் கொண்டிருந்தார். மேலும் அந்த மவ்லவி கூடவே சுப்ஹானல்லாஹ், மாஷா அல்லாஹ், அல்லாஹ் அக்பர் என்றும் கூறினார். மவ்லவி சாஹிப் இந்த அரபி பாட்டைக் கேட்டு இந்த அளவு தலையை அசைக்கின்றார் அவர்கள் கேட்டனர். மவ்லவி சாஹிப், பாருங்கள்! எவ்வளவு அழகான குரலில் திருக்குர்ஆனை ஓதுகிறார் என்று கூறினார். அந்தப் பாட்டு அரபியில் இருந்ததால் அதனை குர்ஆன் ஆக்கி விட்டார். ஆகவே, பித்அத் பரவும் போது சிந்தனையும் இவ்வாறு மாறிக் கொண்டிருக்கிறது.

மருத்துவர்களைப் பற்றி குறிப்பிட்டவாறு அன்னார் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: மருத்துவர்கள் நோயாளிக்கு சிகிச்சை அளித்தவாறு நோயாளிக்கு நாம் தான் சிகிச்சை அளிக்க முடியும். அதனைப் பற்றி வேறு யாரிடமும் ஆலோசனை கேட்க வேண்டிய அவசியமில்லை என்று கருதுகின்றனர். குறிப்பாக இந்தியாவில் இவ்வாறு நடக்கிறது. வேறு யாரிடமும் ஆலோசனை கேட்கத் தேவையில்லை என்று கருதுகின்றனர்.

இவ்விஷயத்தைப் பற்றி தொடர்ந்து கூறுகின்றார்கள்: இந்திய மருத்துவர்களுள் 99 சதவீதம் பேர் மற்றவரிடம் ஆலோசனை கேட்பதே தமக்கு அவமானம் என்று கருதுகின்றனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: டாக்டர் ஹஸ்மத்துல்லாஹ் சாஹிப் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மருத்துவராக இருந்தார்கள். அனுபவத்தில் பல அறுவை சிகிச்சை நிபுணர்களை விட அவர் மிகச் சிறந்தவர்; ஆனால், இதெல்லாம் இருந்தும் அவருக்கு வேறு யாரிடமும் ஆலோசனை கேட்க அவசியமில்லை என்று பொருள் இல்லை.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது நெறிமுறை இவ்வாறு இருந்தது. நானே ஒருமுறை 1918 –ல் நோயுற்ற போதும் நானும் அவ்வாறே செய்தேன். மருத்துவர்கள் மற்றும் வைத்தியர்கள் அனைவரையும் ஒன்று கூட்டினேன். அவர்களிடமிருந்தும் மருந்து வாங்கி உண்டேன். அல்லாஹ் எதன் மூலம் பலன் தருவான் என்று நமக்கு என்ன தெரியும்? ஒரு மருத்துவர் தன்னைத்தானே இறைவன் என்று கருதுவதனால் கருதிக் கொள்ளட்டும். நாம் அவரை அடியார் என்றே கருதுகிறோம். (குத்பாத்தே மஹ்மூது தொகுதி 14, பக்கம் 129)

இதுபோன்று இன்றும் கூட சில மருத்துவர்கள் பிறரிடம் சிகிச்சை எடுத்தது தெரிந்தால் கோபம் கொள்கின்றனர். இதுவும் தவறான முறையாகும். சில நேரங்களில் மூலிகைகளைக் கொண்டு சிகிச்சை செய்யும் சிலர் முறைப்படி மருத்துவராகவும் கூட இருப்பதில்லை. எனினும், அவர்களிடம் சில மருத்துவ குறிப்புகள் இருக்கின்றன. அவர்கள் சிகிச்சை செய்கின்றனர். நோயாளிகளுக்கு மிகச் சிறந்த சிகிச்சை செய்கின்றனர். அதே இடத்தில் சில மருத்துவர்கள் தோல்வி

அடைந்து விடுகின்றனர். எந்த சிகிச்சையும் பலன் தராமல் போய் விடுகிறது. அந்த இடங்களில் இவர்களது சிகிச்சை பலன் தருகிறது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: காபூலைச் சார்ந்த செய்யது அஹ்மது நூர் சாஹிப் அவர்களின் மூக்கில் காயம் இருந்தது. அவர் பல சிகிச்சைகளை மேற்கொண்டார். லாஹூர் மயோ மருத்துவமனைக்கும் சென்றார். எக்ஸ்ரே எடுத்து சிகிச்சை செய்யப்பட்டு, காரணம் கண்டறியப்பட்டது. ஆனால் காயமோ இன்னும் அதிகமாகவே செய்தது. இறுதியில் அவர் பெஷாவர் சென்றார். அங்கு ஒரு நாவிதரிடம் சிகிச்சை செய்தார். அவர் வெறும் மூன்று வேளை மருந்து மட்டுமே கொடுத்தார். நோய் குணமாகி விட்டது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அத்தகைய நிபுணர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு பல தொழில்கள் தெரியும். அவற்றை உயிருடன் வைத்தால் அதன் மூலம் பல புதிய மருத்துவ முறைகள் உருவாக முடியும். அதனை உயிருடன் வைத்தல் என்பதன் பொருள் அதனைப் பற்றி Research செய்ய வைப்பது, அதனை மேற்கொண்டு ஆய்வு செய்வது ஆகும். அவர்கள் தமது மருத்துவ முறைகளை தொடர்ந்து செய்து வருவதன் பக்கம் கவனமூட்ட வேண்டும்.

ஆனால் மூன்றாம் உலக நாடுகளில் நடப்பது என்ன? அதனை அறிந்தவர்கள் அதனை உயிருடன் வைக்க முயற்சி செய்வதும் இல்லை. அவை வளர்ச்சி அடைவதும் இல்லை. மக்களுக்கு அவர்களிடம் கவனம் இருந்தால் இன்னும் பல திறமைகள் அவர்களிடமிருந்து வெளிப்பட முடியும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எலும்புகளை சரி செய்வதை விளையாட்டு வீரர்களும் நாவிதர்களும் அறிந்திருக்கின்றனர். அவர்கள் மூலம் பழைய வளைந்த எலும்புகளைக் கூட சரி செய்ய முடிகிறது. அவற்றில் சிலர் பெரும் திறமைசாலிகளாகவும் இருக்கின்றனர். இன்னும் சிலர் உருவாகி இருக்கின்றனர். சரியாக இருக்கிற எலும்புகளையும் முறித்து விடுகிறார்கள். ஆனால், சில நிபுணர்கள் அதனைக் கற்று பரப்ப முயற்சி செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: பழைய காலத்தில் எல்லாம் தமது சிகிச்சை முறையை வெளிப்படுத்துவதில் பெரும் கருமித்தனம் காட்டினர். எவருக்கும் அதனைக் கூறுவதில்லை. எனவே, அவை அழிந்து போயின. பழைய மக்களிடம் இருந்த பல மருத்துவக் குறிப்புகள் வேறு யாரிடமும் அவர்கள் கூறாமல் யாருக்கும் தெரியாமல் போய் விட்டதால் அத்தோடு முடிந்து போயின. ஐரோப்பியர்கள் அவ்வாறு செய்வதில்லை. மாறாக, தமது நிபுணத்துவத்தை பொதுவாக்குகின்றனர். அதனால் அதிகமாக சம்பாதிக்கவும் முடிகிறது. சில மருந்துகளுக்கு காப்புரிமை இருக்கிறது. சில காலத்திற்குப் பிறகு அவை பொதுவானதாகி விடுகிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறி வந்தார்கள். ஒரு நாவிதன் இருந்தான். மிகவும் கெட்டுப்போன பெரும் பெரும் காயங்களையும் கூட சரியாக்கி விடும் களிம்பு ஒன்றைத் தயாரிக்கும் அறிவு அவனிடம் இருந்தது. மக்கள் தொலை தூரத்தில் இருந்ததெல்லாம் அவனிடமிருந்து சிகிச்சை பெறுவதற்காக வந்தனர். அவரது மகன் அவரிடம் மருத்துவக் குறிப்பைக் கேட்ட போது அதனை அறிந்தவன் உலகில் இருவர் இருக்கக் கூடாது என்று அவன் கூறினான். அதாவது என்னிடம் இருக்கிற அந்த அறிவு என்னிடமே இருக்கும். மகனுக்குக் கூட கற்றுத் தரவில்லை. இறுதியில் அவன் வயோதிகன் ஆனான். கடும் நோய்வாய்ப்பட்டான். அவனது மகன் சொன்னார். என்னிடம் அதனைக் கூறுங்கள். வாழ்வுக்கு உத்தரவாதமில்லை. அந்த வயோதிகர் கூறினார். நல்லது. நான் மரணிக்கப் போகிறேன். எனவே சொல்லித் தருவேன் என்று கருதுகிறாய். ஆனால் நான் குணமும் ஆகலாம் என்பது யாருக்குத் தெரியும்? என்றார். எனவே சொல்லாமல் நிறுத்தி விட்டார். சில மணி நேரத்திற்குப் பிறகு உயிர் பிரிந்து விட்டது. அவரது மகன் பாவம் கேட்டுக் கொண்டே இருந்து விட்டான். சிகிச்சையும் அத்துடன் இறந்து விட்டது. அவருடைய மகன் திறமையைப் பெற்று விடுவேன் என்று நினைத்தார். ஆனால் தனது தந்தையின் பிடிவாதத்தால் அதைப் பற்றி அறியாதவராகவே இருந்து விட்டார். அவரது தந்தையும் பயன்படவில்லை. அவரது சிகிச்சையும் பயன்படவில்லை.

அன்னார் கூறுகின்றார்கள்: கருமித்தனம் வளர்ச்சிக்கு அல்ல. இழிவுக்கும் அவமானத்திற்கும் காரணமாக அமைகிறது. எனவே, அத்தகைய அறிவு சம்பந்தப்பட்ட விஷயத்தில் கருமித்தனம் காட்டக் கூடாது. அதனை பரப்ப முயற்சி செய்ய வேண்டும்.

அன்னார் கூறுகின்றார்கள்: சில வேளை சில குடும்பங்களின் அழிவுக்கே அவை காரணமாகி விடுகின்றன. இந்தத் தொழிலை, திறமையைக் கற்பிப்பது கேடு அல்ல. மாறாக, பலனுள்ளதாகும். அதனால் அறிவு வளர்ச்சி அடைகிறது. அந்தத் திறமைகள் குறிப்பாக இறந்து போன சிகிச்சைகள் உயிர் பெற வேண்டும் என்று விரும்புகிறேன். (அல் ஃபஸ்ல் நாளிதழ் 29 ஏப்ரல் 1939, தொகுதி 27, எண்.98, பக்கம் 4) ஆகவே, சில மருத்துவர்கள் தமது பெருமைக்குக் காரணமாக இதனை ஆக்குகின்றனர். இந்தப் பெருமையால் மற்றவருக்கு கஷ்டத்தை ஏற்படுத்தி விடுகின்றனர். சிலவேளை அறியாமையானது கல்வியை தீர்த்துக் கட்டி விடுகிறது. பிறகு அதனால் உலகிற்கு கிடைக்க விருந்த பயனிலிருந்து உலகம் விலக்கப்பட்டு விடுகிறது.

இவ்விஷயம் வளர்ச்சி குன்றிய நாடுகளில் வளர்ந்து வருகின்ற பொதுவான விஷயமாகும். அங்குள்ள அஹ்மதிய்யா ஜமாஅத் குறிப்பாக இந்த அறியாமையை அகற்றுவதில் கவனம் செலுத்த வேண்டும். மனிதனிடம் பல்வேறு இயல்புகள் உள்ளன. சிலர் மாசற்ற தூய்மையில் அதிகமாகின்றனர். ஒவ்வொரு விஷயத்தையும் ஒவ்வொரு சிறு சிறிய விஷயத்தையும் ஏற்றுக் கொள்கின்றனர். சிலரோ அவசரக்காரர்களாக இருக்கின்றனர். நிய்யத் மோசமாக இல்லா விட்டாலும் கூட ஆட்சேபனை செய்து விடுகின்றனர். ஆட்சேபனையின் சாயல் தென்படத்தக்க அளவில் பேசுகின்றனர். இவ்வாறான மக்களைப் பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது காலத்தில் வாழ்ந்த இரு வகையான இயல்பையுடைய இருவர் ஒன்றாக இருந்தனர் என்று குறிப்பிட்டார்கள்.

4 ஏப்ரல் 1905 –ல் ஒரு பயங்கர பூகம்பம் வந்தது. அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு பூகம்பம் பற்றி அதிகமாக இல்ஹாம் வந்தது. நிலநடுக்கங்கள் தோன்றும் என்ற இறைவார்த்தைக்கு கண்ணியம் செய்தவாறு அன்னார் தமது தோட்டத்திற்குச் சென்றார்கள். பல அறிவற்றவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பிளேக் நோயிற்குப் பயந்து தோட்டத்திற்குச் சென்று விட்டார்கள் என்றனர். அக்காலத்தில் பிளேக் நோயும் இருந்தது. நிலநடுக்கம் வந்து கொண்டிருந்தது. அவர்கள் பிளேக் நோயிற்குப் பயந்து தோட்டத்திற்குச் சென்றார்கள் என்று சில அஹ்மதிகளின் வாயிலிருந்தும் கேட்டது தான் ஆச்சரியமான விஷயமாகும். ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பிளேக் நோயிற்குப் பயந்து ஒருபோதும் தனது வீட்டை விட்டதில்லை. பூகம்பங்கள் பற்றி அப்போது அதிகமான இல்ஹாம்கள் அவர்களுக்கு வந்து கொண்டிருந்ததால் சில காலம் தோட்டத்தில் தங்கியிருப்பது சரியாக இருக்கும் என்று கருதினார்கள். எஞ்சிய நண்பர்களுக்கும் அங்கு வந்து அமருமாறு வலியுறுத்தினார்கள். அவசரமாக இருந்தது. எனவே, சிலருக்காக கூடாரத்திற்கான ஏற்பாடு செய்யப்பட்டது. இன்னும் சிலர் கற்களின் மீது பாயைப் பரப்பி தற்காலிக கூடாரம் அமைத்தனர். மேலும் எல்லாரையும் அவர்கள் தம்முடன் வைத்துக் கொண்டார்கள். (குத்பாத்தே மஹ்மூது தொகுதி 14, பக்கம் 113-114) சில அவசரக்காரர்கள் சில வேளையில் சிறிதும் சிந்திக்காமல் கொள்ளாமல் ஆட்சேபனை செய்து விடுகிறார்கள். நமது நண்பர்கள் அதிலிருந்து விலக வேண்டும்.

குத்பா இல்ஹாமிய்யாவின் போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எவ்வாறு பார்த்தார்கள் என்பதைப் பற்றி விளக்கியவாறு அன்னார் கூறினார்கள்: அன்னாருக்கு அல்லாஹ் அரபியில் ஈது குத்பா ஓதுமாறும் அவர்களுக்கு அதற்கான அறிவு தரப்படும் என்றும் கூறினான். அன்னார் அதற்கு முன் ஒருபோதும் அரபியில் சொற்பொழிவாற்றியதில்லை. ஆனால் அன்னார் சொற்பொழிவாற்ற வந்தபோது பேச்சைத் தொடங்கியதும் எனக்கு நன்றாக நினைவில் உள்ளது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் சிறுவனாக இருந்ததால் அரபியை புரிய முடிந்ததில்லை. ஆனால், அன்னாரிடம் எத்தகைய அழகிய ஒளிமிக்க நிலை உருவாகி இருந்தது என்றால் நான் தொடக்கம் முதல் முடிவு வரை தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருந்தேன். ஆனால் ஒரு வார்த்தை கூட எனக்கு புரிய முடிந்ததில்லை.

(ஹகீகத்துர் ருஃயா. அன்வாருல் உலூம் தொகுதி 4, பக்கம் 187-188)

மஸ்ஜித் முபாரக் காதியானின் முக்கியத்துவத்தைப் பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அதனைப் பற்றி அல் ஃபஸ்ல் பத்திரிகையில் அறிக்கை இவ்வாறு வருகிறது. குத்பா இல்ஹாமிய்யாவை உள்ளடக்கிய ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பிரசுரத்தைப் பார்க்கும் போது மஸ்ஜித் முபாரக் எதுவென்று தெரியவில்லை என்று சில நண்பர்கள் கேட்டார்கள். இதனை மக்கள் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களிடம் கேள்வியாக வைத்தனர். உடனே ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் குத்பா இல்ஹாமிய்யா வாங்கி படித்து விட்டு இதில் கூறப்பட்ட மஸ்ஜித் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உருவாக்கிய பள்ளிவாயிலாகும் என்று கூறியவாறு கீழ்க்கண்ட அறிவிப்பை அன்னார் கூறினார்கள்:

ஒருமுறை உம்முல் முஃமினீன் நோயுற்றார்கள். கிட்டத்தட்ட 40 நாட்கள் நோயுற்றிருந்தார்கள். ஒரு நாள் ஹஸ்ரத் சாஹிப், இந்த மஸ்ஜித் பற்றி இல்ஹாம் உள்ளது. مُبارِکٌ وَمُبارَکٌ وَکُلُّ اَمرٍ مُبارَکٍ یُجعَلُ فِیہِ இது இந்த மஸ்ஜித் பற்றிய முன்னறிவிப்பாகும் என்று கூறினார்கள். அதில் சென்று நான் மருந்து தருகிறேன் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அம்மாஜானுக்கு அப்பள்ளிவாயிலில் சென்று மருந்து கொடுத்தார்கள். இங்கிருந்து அன்னார் மருந்து குடிக்க வைத்தார்கள். இரண்டு மணி நேரத்திற்குள் உம்முல் முஃமினீன் நலம் பெற்று விட்டார்கள். (அல் ஃபஸ்ல் நாளிதழ் 14 பிப்ரவரி 1921, தொகுதி 8, எண்.61, பக்கம் 6) டாக்டர்களுக்கு ஒரு போதனை, மார்க்கத்திற்குச் சேவை செய்யும் கடமையையும் அவர்கள் மேற்கொள்ள வேண்டும். அதற்காக முயற்சி செய்ய வேண்டும்.

இது சம்பந்தமாக அன்னார் கூறுகின்றார்கள்: நோயாளிகளிடம் உண்மை மற்றும் சத்தியம் ஆகியவற்றின் தாக்கம் விரைவாக ஏற்படுகின்றது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் ஒரு டாக்டர் நான் என்ன சேவை செய்ய வேண்டும்?

என்று கேட்டார். அன்னார் கூறினார்கள்: நீங்கள் நோயாளிகளிடம் தப்லீக் செய்யுங்கள். அது மிகவும் நல்ல தருணமாகும். ஏனெனில் நோயாளியின் உள்ளம் மென்மையாக இருக்கிறது. (அஹம் அவ்ர் ஸரூரி உமூர். அன்வாருல் உலூம், தொகுதி 13, பக்கம் 338) எனவே இந்த சிந்தனை இக்கால டாக்டர்களிடமும் இருக்க வேண்டும். இந்த சிந்தனையும் செயலும் தான் உலகை சம்பாதிப்பதுடன் சேர்த்து மார்க்கப் பணியும் செய்யும் வாய்ப்புத் தந்து அல்லாஹ்வின் அருள்களைப் பெறுபவராக்குகிறது.

பர்தா தொடர்பாக பிரச்சனை இங்கு மேற்கத்திய நாடுகளில் மிகவும் ஆவேசத்துடன் எழுப்பப்படுகிறது. பெண்ணுரிமை என்ற பெயரில் அல்லது தீவிரவாதத்தை அழிக்கிறோம் என்ற பெயரில் செய்யப்படுகிறது. அல்லது தேவையில்லாமல் இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்கின்ற காரணத்தால் பிரச்சனையை ஏற்படுத்துகின்றனர். அல்லாஹ் திருக்குர்ஆனில் இதன் பல்வேறு அம்சங்களைக் கூறியுள்ளான். எவ்வாறு பர்தா அணிய வேண்டும்? எந்நிலையில் அணிய வேண்டும்? என்பதைப் பற்றி கூறியுள்ளார்கள். அதில் பெண்களின் அழகு வெளிப்படுவது பற்றியும் வருகிறது.

اِلَّا مَا ظَهَرَ مِنْهَا இதனை தெளிவுபடுத்தியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வழிகாட்டல்களை எடுத்து வைத்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: اِلَّا مَا ظَهَرَ مِنْهَا என்பதன் பொருள் தன்னாலேயே வெளிப்படக்கூடிய பகுதிகளாகும். அதனை கட்டாயச் சூழ்நிலையினால் மூட முடியாது. அது உருவ அமைப்பின் அடிப்படையிலோ அதாவது வெளிப்படையான தோற்றமல்ல. உடல் அமைப்பாகும். உதாரணமாக, உயரம். அதனை மறைப்பது சாத்தியமற்றதாகும். எனவே அதனை வெளிப்படுத்துவதை ஷரீஅத் தடுக்கவில்லை. அல்லது நோயின் காரணமாக ஏதாவது பகுதியை டாக்டரிடம் சிகிச்சைக்காக காண்பிக்க வேண்டியது வருகிறது. அதுவும் திருக்குர்ஆனின்படி வெளிப்படுத்த வேண்டியதாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எந்த அளவுக்கு கூறினார்கள் என்றால், டாக்டர்கள் ஒரு பெண்ணைப் பற்றி முகத்தை மூடக்கூடாது என்றும், மூடினால் உடல் நலம் கெட்டு விடும் என்றும் கூறினால் அங்கும் இங்கும் நடமாட வேண்டும் என்று கூறினால் அதாவது முகத்தை மூடாமலும், வெளியில் நடமாட வேண்டும் என்றும் அவ்வாறு செய்யா விட்டால் உடல் நலம் கெட்டு விடும் என்று கூறினால் அப்பெண் முகத்தைத் திறந்தவாறு நடந்தால் அது அனுமதிக்கப்பட்டதாகும். இன்னும் சொல்வதாயின், சில மார்க்க அறிஞர்களின் கருத்தின் படி ஒரு பெண் கர்ப்பிணியாக இருக்கிறார். நல்ல பெண் மருத்துவர் கிடைக்கவில்லை எனில் ஒரு நல்ல தகுதி வாய்ந்த ஆண் மருத்துவர் மூலமே இவர் குழந்தையைப் பிறக்க வைக்க வேண்டும் என்று டாக்டர் கூறினால் அதனால் உயிர் ஆபத்து நேரிடலாம் என்றால் அப்பெண் ஓர் ஆண் மருத்துவர் மூலம் குழந்தையை பெற்றுக் கொண்டால் அதுவும் கூட அனுமதிக்கப்பட்டதேயாகும். ஒரு பெண் ஓர் ஆண் மருத்துவரிடம் குழந்தையைப் பெற்றெடுக்காமல் இறந்து விட்டால் இறைவனது பார்வையில் அப்பெண் தற்கொலை செய்தவளாகவே கருதப்படுவாள்.

இந்த நிர்பந்தம் வேலையின் அடிப்படையிலும் ஏற்பட முடியும். நான் முன்னரே பொறுப்பில் இருக்கக்கூடிய பெண்களைப் பற்றி கூறினேன். அவர்கள் வேலை செய்யாமல் வாழ்வை கழிக்கவே இயலாது. அவர்கள் பணி செய்ய வேண்டியதிருக்கும். அல்லது ஆண்களின் உதவி இல்லாமல் வாழ்வைக் கழிக்க முடியாது. இவ்வனைத்து விஷயங்கள் اِلَّا مَا ظَهَرَ مِنْهَا என்பதில் அடங்கும். (த:ப்ஸீரே கபீர் தொகுதி 6, பக்கம் 299) எனவே, இஸ்லாம் சுதந்திரத்தையும் நிலைநாட்டியுள்ளது. மேலும் எல்லைகளையும் நிலைநாட்டியுள்ளது. முழுவதும் சுதந்திரமாக விட்டு விடவில்லை. சில நிர்பந்த சூழ்நிலையால் அனுமதியும் உண்டு. பர்தாவை குறைத்துக் கொள்ளலாம்; குறைந்த அளவில் அணிந்து கொள்ளலாம். அத்துடன் அனுமதியற்ற முறையில் இஸ்லாமிய கட்டளைகளை முறிப்பதையும் அது தடுத்துள்ளது. சுதந்திரம் என்ற பெயரில் வெட்கமின்மையை இஸ்லாம் அனுமதிப்பதில்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மார்க்கப் புரிதலைப் பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இஸ்லாமிய விவகாரங்களின் அடிப்படை மார்க்கத்தைப் புரிதல் ஆகும். அதற்குள் பல நுண்ணிய ஞானங்கள் உள்ளன. எதுவரை அதனை நாம் புரியவில்லையோ அதுவரை மனிதன் ஏமாந்து போய் சில நேரங்களில் வழிகேட்டின் பக்கம் சென்று விடுகிறான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒருமுறை ஒரு சபையில் கூறினார்கள்: மனிதன் தக்வாவினை பயன்படுத்தினால் அவன் நூறு திருமணங்கள் கூட செய்ய முடியும். இவ்விஷயம் இயக்கத்தின் சில பத்திரிகைகளில் வெளி வந்தன. அது குறித்து சர்ச்சை ஆரம்பமானது. நான்கு என்ற வரையறை ஒன்றும் இல்லை என்பது தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நிலைப்பாடு போலும் என்பது தெரிகிறது. நான்கு என்ற ஒரு வரம்பு கிடையாது என்று நினைத்து ஆண்கள் மகிழ்ச்சி அடைந்திருப்பார்கள். எத்தனை திருமணம் செய்ய விரும்பினாலும் செய்யலாம் போலும்! ஹஸ்ரத் மீர் நாஸிர் நவாப் சாஹிப் மர்ஹூம் அவர்கள் வெளியில் நடைபெற்ற இந்த சர்ச்சையைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் சென்று கூறினார்கள். இதனால் நீங்கள் கூற வந்த கருத்து என்னவென்று கேட்டார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: நான் கூற வந்த பொருளாவது ஒருவருக்கு ஒரு மனைவி மரணித்து விட்டால் அல்லது ஏதாவது காரணத்தால் மணவிலக்கு அளித்து விட்டால் மனிதன் அதற்குப் பதில் இன்னொரு திருமணம் செய்யலாம். இவ்வாறு 100 திருமணங்கள் செய்யுங்கள். சில மார்க்கங்கள் எடுத்து வைத்துள்ள சில கருத்துகளைப் பற்றிப் பேசும் போது இதனைக் கூறினார்கள். அங்கு பேச்சு ஒரு விஷயத்தைப் பற்றி நடைபெற்றது. ஆனால், சிலர் பிரச்சனைக்கு தீர்ப்பு வந்து விட்டது என்கின்றனர். முன் பின் தொடர்ச்சி புரியாமல் கூறுகின்றனர். அன்னார் இக்கருத்தை சில மார்க்கங்களின் கொள்கைகளை மறுப்பதற்காக கூறியதாகும். அதாவது அந்த மார்க்கங்களில் மனிதன் வாழ்நாள் முழுவதும் இரண்டாவது திருமணமே செய்யக் கூடாது. மனைவி மரணித்து விட்டாலும் சரி, தலாக் கொடுத்து விட்டாலும் சரி, ஒருமுறை திருமணம் செய்தால் முடிந்து விட்டது. குறிப்பாக பெண்கள் மரணித்து விட்டால் திருமணம் செய்யக் கூடாது என்ற நிலை இருக்கின்றது. அன்னார் இந்த எண்ணத்தை மறுத்தார்கள். இது சம்பந்தமாகத் தான் அங்கு பேசப்பட்டது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது இக்கூற்று விளக்கப்படாமல் விடப்பட்டிருந்தால் சிறிது காலத்திற்குப் பிறகு அன்னாரின் கொள்கை ஒருவர் எத்தனை திருமணம் வேண்டுமானாலும் செய்யலாம். தக்வா தான் நிபந்தனை என்பதாகவே இருந்தது என்று கருதப்பட்டிருக்கும். இக்காலத்தில் ஆண்கள் இரண்டாவது மூன்றாவது திருமணம் செய்கிறார்கள். ஆனால் தக்வாவின் நிபந்தனையை முன் வைப்பதில்லை. தக்வாவின் நிபந்தனை அவசியமாகும்.

இது பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எனக்கு நினைவிருக்கிறது. ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடைய கொள்கை, ஒரு காலம் வரை நான்கிற்கு மேல் திருமணம் செய்வது அனுமதிப்பட்டது என்றிருந்தது. அந்த நாட்களில் சிறிய ஜமாஅத்தாக இருந்தாலும், நண்பர்கள் கொஞ்சமாக இருந்தாலும் காதியானில் பெரும்பாலும் அவர்கள் சந்தித்துக் கொள்வர். அப்போது இந்த விவகாரத்தில் பெரும் விவாதங்கள் நடந்தன. அந்நாட்களின் இந்த விவகாரமும் விவாதத்திற்கு வந்தது. ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான்கு மனைவிகள் என்ற வரம்பு ஷரீஅத்தில் நிரூபிக்கப்படவில்லை. அபூதாவூதின் அறிவிப்பையும் எடுத்து வைத்தார்கள். ஹஸ்ரத் இமாம் ஹஸனுக்கு 18–19 திருமணங்கள் நடந்துள்ளன. ஒருவர் ஒரு சபையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கொள்கை இதுவல்ல என்று கூறிய போது ஒருவேளை இது சம்பந்தமாக அன்னாரிடம் முழுமையாக எடுத்து வைக்கப்படாமல் இருந்திருக்கலாம் என்று ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் நினைத்தார்கள். எனவே ஒருவரிடம் கூறினார்கள். இந்த நூலை எடுத்துக் கொண்டு செல்லுங்கள். இது அபூதாவூதின் அறிவிப்பு – இமாம் ஹஸன் பற்றியதாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் இந்த சான்றைக் காட்டி விட்டு வாரும் என்று அனுப்பினார்கள். நூலை எடுத்துச் சென்றவர் வழியில் என்னைச் சந்தித்தார். கக்கத்தில் அந்த ஹதீஸ் நூலை வைத்தவாறு மிகவும் உற்சாகமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் சென்று கொண்டிருந்தார். நான் என்ன விஷயம்? என்று கேட்டேன். ஹஸ்ரத் மவ்லவி சாஹிப் இந்த சான்றை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் காட்டுவதற்காக அனுப்பினார்கள் என்றார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அவரது உற்சாகத்தைப் பார்த்து எனக்கும் ஆர்வம் ஏற்பட்டது. அவர் என்ன பதிலைக் கொண்டு வருகிறார் என்று எதிர்பார்த்தவாறு நான் நின்று விட்டேன். சிறிது நேரத்திற்குப் பிறகு திரும்பி வந்தார். நான் பார்த்தேன். போகும்போது மிகவும் மகிழ்ச்சியுடன் போனார். வரும்போது தலையைக் குனிந்து கொண்டு வந்து கொண்டு இருந்தார். என்ன விஷயம் என்று நான் கேட்டேன். அவர் கூறினார்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். இமாம் ஹஸன் அவர்கள் ஒரே நேரத்தில்தான் எல்லா மனைவிகளையும் வைத்திருந்தார்கள் என்று இதில் எங்கு எழுதப்பட்டுள்ளது என்று மவ்லவி சாஹிபிடம் கேளுங்கள். (குத்பாத்தே மஹ்மூது தொகுதி 13, பக்கம் 35-36) இவ்வாறு இந்த விவகாரம் தீர்ந்தது. எவ்வாறிருப்பினும் நான்கிற்கு மேல் திருமணம் முடியாது. அதற்கும் நிபந்தனை உள்ளது. தக்வா பெரும் நிபந்தனையாகும். இமாமின் வார்த்தைக்கு பதில் அளிப்பது பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்.

இமாமின் குரலுக்கு எதிரில் தனி நபர்களின் குரல் ஒன்றுமே இல்லை. இறைவனது ரஸூலுடைய குரல் உங்கள் காதுகளில் விழுந்தால் உடனே அதற்கு பதில் அளியுங்கள். அது உங்கள் மீது கடமையாகும். அதனை செயல்படுத்த முயற்சி செய்யுங்கள். இதிலேயே உங்கள் முன்னேற்றத்தின் இரகசியம் உள்ளது. மனிதன் அப்போது தொழுது கொண்டிருந்தாலும் கூட தொழுகையை முறித்து விட்டு இறைவனது ரஸூலின் குரலுக்கு பதிலளிக்க வேண்டும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நம்மிடம் இத்தகைய உதாரணங்கள் கிடைக்கின்றன. இந்த வகையில் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் அவ்வாறே செய்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் குரல் கொடுத்தால் உடனே தொழுகையை முறித்து விட்டு அன்னார் முன் வந்து விடுவார்கள். அநேகமாக மீர் மஹ்தி ஹுஸைன் சாஹிப் மற்றும் அப்துல்லாஹ் சாஹிப் சனோரி அவர்களும் அவ்வாறே செய்தார்கள். இந்த இருவரும் கூட அவ்வாறே செய்தார்கள். பல்வேறு காலகட்டங்களில் பலர் அதனை ஆட்சேபனை செய்தனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த வசனத்தைப் படித்தார்கள்.

لَا تَجْعَلُوْا دُعَآءَ الرَّسُوْلِ بَيْنَكُمْ كَدُعَآءِ بَعْضِكُمْ بَعْضًا قَدْ يَعْلَمُ اللّٰهُ الَّذِيْنَ يَتَسَلَّلُوْنَ مِنْكُمْ لِوَاذًا فَلْيَحْذَرِ الَّذِيْنَ يُخَالِفُوْنَ عَنْ اَمْرِهٖٓ اَنْ تُصِيْبَهُمْ فِتْنَةٌ اَوْ يُصِيْبَهُمْ عَذَابٌ اَلِيْمٌ

நீங்கள் ஒருவர் மற்றவரை அழைப்பது போன்று உங்களிடையே உள்ள ரஸூலை அழைக்கலாம் என்று கருதாதீர்கள். நீங்கள் உரத்த குரலில் அல்லது அவர்களது அழைப்பிற்குப் பதில் சொன்னாலும் சரி, சொல்லா விட்டாலும் சரி என்றும் கருத வேண்டாம். மவுனமாக நழுவிச் செல்பவர்களை அல்லாஹ் நன்கறிகிறான். அவனது கட்டளைகளை மறுப்பவர்கள் ஒரு சோதனையோ பயங்கர தண்டனையோ வருவதற்கு அஞ்சட்டும். **(24:64)**

அதுபோன்று இன்னோரிடத்தில் வருகிறது.

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اسْتَجِيْبُوْا لِلّٰهِ وَلِلرَّسُوْلِ اِذَا دَعَاكُمْ لِمَا يُحْيِيْكُمْ

நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ் மற்றும் ரஸூலின் வார்த்தைகளைக் கேட்பதற்காக அவர் உங்களை உயிரூட்டுவதற்காக அழைக்கும் போது உடனே செல்லுங்கள். **(8:25)** நபியின் குரலுக்கு உடனே பதிலளிப்பது முக்கியமான விஷயமாகும். இது ஈமானின் அடையாளங்களுள் மிகப் பெரிய அடையாளமாகும். (த.ஃப்ஸீரே கபீர் தொகுதி 6, பக்கம் 408-409) எனவே, இந்த பெரியவர்கள் செய்தது முற்றிலும் அனுமதிக்கப்பட்டதாகும்.

தொழுகை அசல் நோக்கமில்லை. வேறு எந்த நன்மையும் அசல் நோக்கமில்லை. நபி இருக்கும் போது அசல் நோக்கமே அல்லாஹ்வை அடைவதும் அவனது பேச்சைக் கேட்பதும் ஆகும். அதற்கு உதாரணம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபாக்களிடம் காணப்படுகிறது. அதே போன்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய சஹாபாக்களிடமும் காணப்படுகிறது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கவனமூட்டிய ஒரு முக்கிய விஷயம் இப்போதும் முக்கிய விஷயமேயாகும்.

ஒரு முஃமின் உண்மையில் அதிகமாக கவனமூட்டப்படுவதை எதிர்பார்த்துக் கொண்டிருக்க மாட்டார். அவருக்கு ஒரு சைகையே போதுமானதாகும். ஒரு சைகையைப் புரிந்து கொண்டு எவ்வளவு ஆர்வத்துடன் பணி செய்வார் என்றால் சிலருக்கு பைத்தியமோ என்ற ஐயம் ஏற்பட்டு விடுகிறது. எனவேதான் முழுமையான மனிதர்கள் உலகில் எத்தனை பேர் தோன்றினார்களோ அவர்கள் அனைவரையும் உலகம் பைத்தியம் என்றது. அல்லாஹ் மன்னிக்க வேண்டும். எனக்கு ஓர் ஆசிரியர் இருந்தார். அவரது பெயர் மவ்லவி யார் முஹம்மது சாஹிப் ஆகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபியாக அவர் இருந்தார். அவருடைய மூளையில் ஒரு குறைபாடு இருந்தது. அது எவ்வாறென்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது அன்பிற்குரியவராகவும் தம்மை அன்னாரின் பேரன்பராகவும் கருதி வந்தார். அந்த பேரன்பின் காரணமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தம்மை வாக்களிக்கப்பட்ட மகனாகவும் முஸ்லிஹ் மவ்வூதாகவும் ஆக்கி இருப்பதாக அவர் கருதினார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பேசும் போது ஆர்வத்தில் தமது கையை தமது தொடையில் தட்டியவாறு ஒருவரை அழைப்பது போன்று பேசுவார்கள்.

ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், இதேபோன்று ஆவேசத்துடன் ஒரு சில வார்த்தைகளைக் கூறிய போது ஹஸ்ரத் யார் முஹம்மது சாஹிப் பாய்ந்து சென்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அருகில் சென்று அமர்ந்தார்கள். பிறகு ஒருவர் ஏன் அவ்வாறு செய்தீர்கள்? என்று கேட்ட போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு சைகை செய்தார்கள் அல்லவா? அது என்னை நோக்கிதான். என்னை முன்னால் வருமாறு கூறினார்கள். எனவே பாய்ந்து கொண்டு நான் முன்னால் வந்து விட்டேன் என்றார்.

இது ஒரு பைத்தியக்காரத்தனம்தான். ஆனால், சில வகையான பைத்தியக்காரத்தனம் கூட நல்லதாக இருக்கின்றது. இறுதியில் இவரது பைத்தியக்காரத்தனம் காழ்ப்புணர்ச்சியின் பக்கம் செல்லவில்லை. அன்பின் பக்கம் சென்றது. ஆகவே, அன்பின் பைத்தியம் இல்லாத சைகையையும் கூட சைகையாகக் கருதியது. தாம் சைகை செய்யப்படாத நிலையில் தாம் சைகை செய்யப்பட்டதாகக் கருதியது. அன்னார் ஜமாஅத்திற்கு இவ்வாறு போதனை செய்தார்கள்.

ஒரு சமுதாயம் இறைவன் மீது அன்பு இருப்பதாக வாதம் செய்கிறது எனில் தம்மீது செய்யப்பட்ட சரியான சைகையை ஏன் புரிவதில்லை? நமது ஜமாஅத்தின் பைத்தியங்களின் அந்த அன்பு யார் முஹம்மது சாஹிப் அளவுக்குக் கூட ஜமாஅத்தின் மீது இல்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொடையின் மீது கையை வைத்தால் தன்னைத்தான் கூப்பிடுவதாக அவர் கருதினார். இங்கு அல்லாஹ் தெளிவான முறையில் கட்டளையிடுகிறான். அவனது மஸீஹ் கட்டளை தருகிறார். நாம் அதில் கவனம் செலுத்துவதில்லை. (குத்பாத்தே மஹ்மூது தொகுதி 17, பக்கம் 733-734) ஆகவே நாம் இதன் மீது கவனம் செலுத்துவது அவசியமாகும். எந்த அளவுக்கு அல்லாஹ்வுடைய சைகையைப் புரிந்துள்ளோம் என்பதை ஆய்வு செய்யுங்கள். ஒவ்வொரு பணியையும் அல்லாஹ்வுடைய திருப்தி மற்றும் கட்டளையின்படி நடந்தவாறு செய்யுங்கள். மற்றவரை மகிழ்ச்சிப்படுத்த வேலை செய்யக் கூடாது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: மவ்லவி குலாம் அலி சாஹிப் வஹாபியாக இருந்தார். வஹாபிகளின் மார்க்கத் தீர்ப்பு இந்தியாவில் ஜுமுஆ நடத்தலாம். ஆனால், ஹனஃபிகளின் கருத்தின்படி இந்தியாவில் ஜுமுஆ நடத்த அனுமதியில்லை. அவர்களின் விவகாரங்கள் ஆச்சரியமானவையாக இருந்தன. ஏனெனில் அவர் கூறி வந்தார். முஸ்லிம் அரசர்களாக இருந்தால் அங்கு ஜுமுஆ நடத்தலாம். ஜுமுஆ தொழ வைப்பவர் காஸியாகவும் ஜுமுஆ நடத்தப்படும் இடம் நகரமாகவும் இருக்க வேண்டும். இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சி நடைபெறுவதால் முஸ்லிம்கள் ஆட்சியாளர்களாகவும் இல்லை. காஸியாகவும் இல்லை. எனவே ஜுமுஆ தொழுகையை அனுமதிக்கப்பட்டதாகக் கருதவில்லை. இவ்வாறு பிரச்சனை உருவாகி இருந்தது. நீங்கள் ஜுமுஆவுக்காக அழைக்கப்பட்டால் உங்களது எல்லா பணிகளையும் விட்டு விட்டு ஜுமுஆவுக்குச் செல்லுங்கள் என்றும் வருகிறது. எனவே, அவரது உள்ளத்தில் திருப்தி இல்லாமல் இருந்தது. ஒருபுறம் அவரது உள்ளம் ஜுமுஆ தொழ வேண்டும் என்று விரும்பியது. இன்னொருபுறம் ஒரு ஹனஃபி மவ்லவி நமக்கு எதிராக மார்க்கத் தீர்ப்பு வழங்கி விடக்கூடாதே என்று அவர் பயப்படவும் செய்தார். எனவே, இந்தப் பிரச்சனையின் காரணமாக அவரது நடைமுறை இவ்வாறு இருந்து வந்தது. ஜுமுஆ நாளில் அவரது ஊரில் முதலில் ஜுமுஆ தொழுவார். பிறகு ளுஹரும் தொழுவார். ஜுமுஆ தொழுவது சரியென்றாலும் நாம் தப்பி விடுவோம். ளுஹர் தொழுவது சரி என்றாலும் தப்பி விடுவோம். எனவே, ளுஹர் தொழுகைக்கு, இஹ்தியாத்தீ தொழுகை (ளுஹர் தொழுகைக்குப் பதில் முன்னெச்சரிக்கை தொழுகை) என்று பெயர் வைத்திருந்தார். இறைவன் நமது ஜுமுஆ தொழுகையைத் தூக்கி எறிந்து விட்டால் நாம் ளுஹரை எடுத்து அவன் முன் வைப்போம். அவன் ளுஹரை மறுத்து விட்டால் நாம் ஜுமுஆவை அவன் முன் வைப்போம். ஒருவர் இந்த இஹ்தியாத்தீ தொழுகையை (முன்னெச்சரிக்கை தொழுகையை) தொழவில்லை எனில் அவர் வஹாபி என்று கருதப்பட்டார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒருமுறை மவ்லவி குலாம் அலி சாஹிபுடம் குர்தாஸ்பூர் சென்றோம். வழியில் ஜுமுஆ வேளை வந்தது. நாம் தொழுவதற்காக ஒரு பள்ளிவாயிலுக்குள் போய் விட்டோம். அவருடைய பொதுவான நடைமுறை வஹாபிகளை ஒத்திருந்தது. ஏனெனில் வஹாபிகளின் ஹதீஸ்களின் படி செயல்படுவது அவசியம் என்று கருதி வந்தார். அவரது கொள்கை, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சுன்னத்தின்படி செயல்படுவதே ஈடேற்றத்திற்குரிய வழி என்பதாகும். சுருக்கமாக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் குலாம் அலி சாஹிபுடன் சென்றார்கள். ஜுமுஆ தொழுதார்கள். மவ்லவி குலாம் அலி சாஹிப் தொழுகையை முடித்ததும் 4 ரக்அத் ளுஹர் தொழுதார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அவரிடம், மவ்லவி சாஹிப் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு 4 ரக்அத் ஏன்? எனக் கேட்டார்கள். அதற்கு மவ்லவி சாஹிப், இது ஓர் இஹ்தியாத்தீ தொழுகையாகும் (எச்சரிக்கைக்காக தொழுவதாகும்) என்றார்கள். நான் கூறினேன். மவ்லவி சாஹிப், நீங்கள் வஹாபி ஆவீர்கள். கொள்கை அளவில் அதற்கு எதிரியாவீர்கள். பிறகு எச்சரிக்கை தொழுகைக்கு என்ன அர்த்தம்? இறைவன் முன்னிலையில் நமது ஜுமுஆ ஏற்றுக் கொள்ளப்படுமா? அல்லது ளுஹரா என்ற பொருளில் நான் எச்சரிக்கை தொழுகை தொழவில்லை. மாறாக, மக்கள் எதிர்க்கக் கூடாது என்பதற்காக தொழுதேன். மக்கள் மீது உள்ள பயத்தினால் மவ்லவி குலாம் அலி போன்று சிலர் செய்கின்றனர். ஜுமுஆ தொழுது விட்டோம் என்று உள்ளத்தில் திருப்தி அடைகிறார். இன்னொருபுறம் மக்களை மகிழ்ச்சி அடையச் செய்ய 4 ரக்அத் ளுஹரும் தொழுது விட்டார். (த.ஃப்ஸீரே கபீர் தொகுதி 6, பக்கம் 382-383)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் ஒரு மஜ்லிஸில் ஒருவர் கேட்டார். நமது ஜமாஅத்தில் பெரும்பாலார் தாடியை மழித்து விடுகின்றனர். அன்னார் கூறினார்கள்: அசல் விஷயம் இறைநேசமாகும். இம்மக்களின் உள்ளத்தின் இறைநேசம் உருவாகி விடும் என்றால் மக்கள் தன்னாலேயே நம்மைப் பின்பற்றத் தொடங்கி விடுவார்கள். (ஹமாரே ஸிம்மா தமாம் துன்யா கீ .ஃபதஹ் கர்னே கா காம் ஹே. அன்வாருல் உலூம், தொகுதி 18, பக்கம் 465) நாம் உண்மையான முறையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வார்த்தைகளைப் புரிபவர்களாக ஆவார்களாக! உண்மையான இறைநேசம் உள்ளத்தில் உருவாகட்டுமாக! ஒவ்வொரு சொல்லும் செயலும் இறை கட்டளைகளுக்கேற்ப அமையட்டுமாக!

தொழுகைக்குப் பிறகு ஒரு காயிப் ஜனாஸா தொழுகை தொழ வைப்பேன். இது சிரியாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய அப்துந் நூர் ஜாபி சாஹிப் உடையதாகும். இவர் **1989** –ல் பிறந்தார். இவரை அந்நாட்டின் அரசு கைது செய்து விட்டது. சரியான விபரம் கூட இன்னும் வரவில்லை. எவ்வாறிருப்பினும், இருக்கிற விபரங்களின்படி முதலில் இவர் Business Management –ல் பட்டம் பெற்றார். **31** டிசம்பர் **2015** அன்று அரசு இவரை கைது செய்தது. கைதிற்கான காரணம் இவரது மொபைலை ஒருவர் வாங்கி ஃபோன் செய்து விட்டார். சிரியாவின் நிலைமை மோசமாக இருக்கிறது. ஒருவர் தற்செயலாக ஒருவரது ஃபோனை இன்னொருவருக்கு தருவது ஒன்றும் ஆட்சேபனைக்கு உரியதல்ல. எவ்வாறிருப்பினும், கிளர்ச்சியாளர்களுள் ஒருவர் இவருடைய ஃபோனை வாங்கி இன்னொருவருடன் கொடுக்கல் வாங்கல் விவகாரம் பேசினார். அரசின் ஏஜென்ஸிகள் பரிசோதனை செய்தனர். இவரை பிடித்து விட்டார்கள். விசாரணையில் இவரது ஃபோனிலிருந்து ஃபோன்கால் சென்றது தெரிய வந்தது. அவருக்கு கிளர்ச்சிக்காரர்களுடன் தொடர்பிருக்கிறது என்று கூறி இவர் கைது செய்யப்பட்டார். பிறகு ஷஹீதும் ஆக்கப்பட்டார். மருத்துவ அறிக்கையின்படி இவர் கைது செய்யப்பட்ட மூன்றாம் நாளிலேயே தலையில் கடும் காயம் ஏற்பட்டு மரணித்து விட்டார். காவல்துறையினர் இவரை கடும் சித்ரவதை செய்தனர்.

கிளர்ச்சியாளர்கள் போன்றுதான் ஆட்சியிலுள்ள மிருகங்களின் நிலையும் உள்ளது. இவரது வஃபாத் செய்தி இவரது வீட்டினருக்கு 22 பிப்ரவரி 2016 –ல் கிடைத்தது. இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

இவர் சலீம் அஹ்மது ஜாபி சாஹிபின் பேரரும், பழைய அஹ்மதியும் ஆவார். சலீம் அஹ்மது ஜாபி முஸ்லிஹ் மவ்வூது காலத்திலேயே ரப்வா சென்றவர். நல்ல உருதுவும் வரும். இவர் மிகவும் இனிமையானவர், மென்மையாகப் பேசுபவர், எளிய குணம் படைத்தவர் என்றும் நல்லொழுக்கம் உடையவர் என்றும் பிரபல்யமானவராக இருந்தார். இயல்பில் முற்றிலுமாகவே கடுமை இருந்ததில்லை. உடல் நலமும், உறுதியான உடலமைப்பும் கொண்டவராக இருந்தார்.

இவரது சகோதரி ஹிபத்துர் ரஹ்மான் ஜாபி கூறுகிறார்: எனது சகோதரர் பிறக்கும் முன் எனது தாயார் கனவு கண்டார். எனக்கு ஒரு மகன் பிறக்கிறார். அப்போது ஓர் ஒளி பிறந்துள்ளதாகக் கூறப்பட்டது. பிறகு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களிடமிருந்து அப்துர்நூர் என்ற பெயர் வழங்கப்பட்டது. எனது சகோதரர் மிகவும் கட்டுப்படக்கூடியவர். எனக்கு அவர் பேசிய கடைசி ஃபோனில், நான் உண்மையான அஹ்மதியாவேன். மற்றவர்கள் என்னிடம் மன்னிப்பைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று பல்வேறு தரப்பினரிடம் கூறியுள்ளேன் என்று கூறினார்.

எவ்வாறிருப்பினும், அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக! இவரது உறவினர்களுள் தாயார், சகோதரி, சகோதரர் மற்றும் தந்தைவழிப் பாட்டனாரும் இருக்கிறனர். அனைவருக்கும் அல்லாஹ் பொறுமையை வழங்குவானாக! சிரியாவின் நிலைமைக்காகவும் துஆ செய்ய வேண்டும். அங்கு அரசின் அநீதியின் காரணத்தால்தான் கிளர்ச்சியாளர்கள் எழுந்துள்ளனர். இரு தரப்பினரும் அநீதியில் முன்னேறியுள்ளனர். மூன்றாவது பிரிவு டாயிஷ் தீவிரவாதிகள் ஆவர். இவர்கள் இஸ்லாத்தின் பெயரால் அநீதியின் பெரும் முன்னுதாரணத்தை நிலைநாட்டுகின்றனர். நல்லியல்பு கொண்டுள்ள அங்கு வாழும் மக்கள் அரசிடமிருந்தும் பாதுகாப்பாக இருக்க முடியாது. அரசும் அநீதியிழைக்கக் கூடியது. அரசிற்கு எதிரான கிளர்ச்சியாளர்களும் அநீதியிழைப்பவர்கள் ஆவர். இஸ்லாத்தின் பெயரால் அரசு நடத்துவதாக வாதிப்போர்களால் கண்ணியமிக்கவர்கள் அஹ்மதிகள் நசுக்கப்படுகின்றனர். அவர்களோ எந்தப் பிரிவிலும் இணைந்தவர்கள் அல்லர்.

அல்லாஹ் கருணை காட்டுவானாக! இந்த நாட்டின் மீதும் கருணை காட்டுவானாக! அநீதியிழைப்பவர்களிடமிருந்து இந்த நாட்டிற்கு விரைவில் விடுதலை வழங்குவானாக!

## இந்தி மற்றும் ஏனைய மாநில மொழிகளில் பத்ர் வாரப் பத்திரிகையின் வெளியீடு

*ஜமாஅத் சகோதரர்கள் இவ்விஷயத்தை அறிந்து நிச்சயமாக மகிழ்ச்சி அடைவர். அதாவது ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினின் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் அனுமதியுடன் தாருல் அமான் ஆகிய காதியானிலிருந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் தொடங்கப்பட்ட பத்ர் பத்திரிகை இப்போது இந்தியாவின் தேசிய மொழியான இந்தியிலும், ஒடியா, வங்காளம், தமிழ், தெலுங்கு, மலையாளம் ஆகிய ஐந்து மொழிகளிலும் வெளி வரத் தொடங்கி இருக்கின்றது. இந்தப் பத்திரிகை இதற்கு முன்பு மார்ச் 2014 முதல் சுற்றறிக்கை வடிவில் வெளிவந்து கொண்டிருந்தது. இப்போது அல்லாஹ்வின் அருளால் பத்ர் பத்திரிகை என்ற பெயரில் மேற்குறிப்பிடப் -பட்ட மொழிகளில் Registration (பதிவு செய்யப்படுதல்) -ற்கான அனுமதி கிடைத்து விட்டது. இந்த அனுமதி கிடைத்த பிறகு இதன் முதல் இதழ் முறையாக 3 மார்ச் 2016 முதல் வெளிவர ஆரம்பித்து விட்டது.*

***இந்தப் பத்திரிகையில் கீழ்க்காணும் பத்திகள் இடம் பெறும்:***

*திருக்குர்ஆன் விரிவுரை, ஹதீஸ் விளக்கவுரை, ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றுகள், ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினின் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் ஜுமுஆ பேருரைகள், ஹுஸுர் அவர்களின் சுற்றுப் பயணங்கள் தொடர்பான அறிக்கைகள், கல்வி மற்றும் மார்க்க தொடர்பான கட்டுரைகள், அறிவிப்புகள், ஜமாஅத்துகளின் பணிகள் தொடர்பான அறிக்கைகள், உள்ளத்தை ஈர்க்கக்கூடிய ஏனைய விஷயங்கள் மற்றும் வஸிய்யத் ஆகியவை வெளியாகின்றன.*

*எல்லா மாவட்ட அமீர்களும், உள்ளூர் அமீர்களும், ஜமாஅத் தலைவர்களும், முபல்லிக்குகளும், முஅல்லிம்களும், கிளைஅமைப்புகளின் மாவட்ட மற்றும் உள்ளூர் பொறுப்பாளர்களும் ஜமாஅத் சகோதரர்களும் தனது அன்பான இமாமின் குரலுக்கு லப்பைக் என்று கூறியவாறு உங்களது தாய்மொழியில் வெளிவரும் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பத்திரிகையை உங்களது பெயரில் வரவழைக்க வேண்டும். மேலும் உங்கள் ஜமாஅத்திலுள்ள எல்லா ஜமாஅத் சகோதரக்களின் வீட்டிலும் இந்தப் பத்திரிகை வருமாறு செய்யுங்கள். உங்கள் தப்லீகின் கீழுள்ள அஹ்மதி அல்லாதவர்கள் மற்றும் முஸ்லிம் அல்லாத சகோதரர்களின் பெயரில் இந்தப் பத்திரிகையை வருமாறு செய்யுங்கள். இவ்வாறே கட்டுரையை வடிவமைக்கக்கூடிய சகோதரர்கள் சுருக்கமான கல்வி மற்றும் தர்பிய்யத் தொடர்பான கட்டுரைகளையும் பத்திரிகையில் வெளியிடுவதற்காக அனுப்பி வையுங்கள்.*

*(காரி நவாப் அஹ்மது, மேனேஜர், பத்ர் வாரப் பத்திரிகை, காதியான்)*

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி)*

இரட்சிப்பைப் பெறுவதற்கு ஏகத்துவத்தை ஏற்றுக் கொள்வது மட்டும் போதுமானது; நபியின் மீது ஈமான் கொள்ள வேண்டிய தேவை இல்லை என்பது சில அறிவற்றவர்களின் யூகமாக இருக்கின்றது. அவர்கள் ஆன்மாவை உடலிருந்து பிரிக்க விரும்புகின்றனர். இந்த யூகம் முழுக்க முழுக்க உள்ளத்தின் குருட்டுத் தன்மையை அடிப்படையாகக் கொண்டதாகும். உண்மையான தவ்ஹீது, நபியின் மூலமாகவே வெளிப்படுகின்றது. அது அல்லாமல் அது நடக்க முடியாது என்பது தெளிவாக தெரியும் போது அது நபியின் மீது ஈமான் கொள்ளாமல் எப்படி கிடைக்க முடியும்? தவ்ஹீது எவ்வாறு நிலைத்திருக்க முடியும்? தவ்ஹீதிற்கு காரணமானவரும், தவ்ஹீதை உருவாக்கியவரும், தவ்ஹீதின் தந்தையும், தவ்ஹீதின் தலையூற்றும், தவ்ஹீதின் முழுமையான வெளிப்பாடும் நபி மட்டுமே ஆவார். அவர் மூலமாகவே இறைவனது மறைவான முகம் தென்படுகின்றது. மேலும் இறைவன் இருக்கின்றான் என்பது தெரிய வருகின்றது. விஷயம் என்னவென்றால், ஒருபுறம் மகிமை மிக்க ஏக இறைவனின் இருப்பானது மிகவும் தன்னிறைவு பெற்றதாகவும், தேவைகளற்றதாகவும் இருக்கின்றது. அவனுக்கு ஒருவர் நேர்வழியில் அல்லது வழிகேட்டில் இருப்பது பற்றிய கவலை இல்லை. மறுபுறம் அவன் இயல்பாகவே தான் அடையாளங்கண்டு கொள்ளப்படவேண்டும் என்பதை எதிர்பார்க்கின்றான். தொன்றுதொட்டு இருந்து வரும் அவனது கருணையிலிருந்து மக்கள் பயனடைய வேண்டும் என்று அவன் விரும்புகின்றான். பூமியிலுள்ள எல்லா உள்ளங்களிலிருந்தும் தூய இறைவனின் அன்பையும் நெருக்கத்தையும் பெறுவதற்காக முழுமையான தகுதியுள்ள இயல்பின் ஆற்றலை தன்னகத்தே கொண்டுள்ள, மனித இனத்திடம் அனுதாபத்துடன் நடந்து கொள்கின்ற முழுமையான தகுதியை தனது இயல்பில் கொண்டிருக்கின்ற (அந்த நபியின்) அத்தகைய உள்ளத்தின் மீது அந்த இறைவன் தனது தோற்றத்தை வெளிப்படுத்துகின்றான். அவர் மீது தனது இருப்பையும் நிரந்தரமாக இருக்கின்ற இறை பண்புகளின் ஒளிகளையும் வெளிப்படுத்துகின்றான். இவ்வாறு சிறப்பான உயர்வான இயல்பைக் கொண்ட மனிதரை வேறு சொற்களில் நாம் நபி என்று கூறுகின்றோம். அந்த நபி இறைவன் பக்கம் ஈர்க்கப்படுகின்றார். பிறகு அந்த நபி மனித இனத்திற்காக அவரது உள்ளத்தில் முழுமையாக பொங்கி எழுகின்ற அனுதாப உணர்வின் காரணமாக தனது ஆன்மீக கவனம், மன்றாடுதல் மற்றும் பணிவின் மூலமாக அவர் மீது வெளிப்பட்டுள்ள அந்த இறைவனை மற்ற மக்களும் அடையாளங்கண்டு இரட்சிப்பைப் பெற வேண்டும் என்று விரும்புகின்றார். தனது உள்ளத்தின் விருப்பத்துடன் தன்னை தியாகம் செய்வதை இறைவன் முன்னால் அவர் எடுத்து வைக்கின்றார். மேலும் மக்கள் உயிர் பெற வேண்டும என்ற ஆசையில் பல மரணங்களை அவர் ஏற்றுக் கொள்கின்றார். தன்னை பெரும் கஷ்டங்களில் ஆழ்த்திக் கொள்கின்றார். உதாரணமாக, لَعَلَّكَ بَاخِعٌ نَّفْسَكَ أَلَّا يَكُونُوا مُؤْمِنِينَ (இந்த நிராகரிப்பவர்கள் ஏன் ஈமான் கொள்ளவில்லை என்ற துக்கத்தில் உம்மையே நீர் மாய்த்துக் கொள்வீரா?) என்ற வசனத்தில் இதுவே சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது. அப்போது இறைவன் படைப்பினங்களின் தேவைகளற்றவனாகவும், அவர்களிடமிருந்து தன்னிறைவு பெற்றவனாக இருந்தாலும் அந்த நபியின் நிரந்தரமான துக்கம், துயரம், வேதனை, கலக்கம், பணிவு, தனது ஒன்றுமற்ற தன்மை, மிக உயர் தகுதியில் இருந்த உண்மை, தூய்மை ஆகியவற்றைப் பார்த்து படைப்பினங்களில் ஆயத்தமாக இருக்கும் உள்ளங்களில் தனது அடையாளங்கள் மூலமாக தனது முகத்தை வெளிப்படுத்திக் காட்டுகின்றான். அவரது எழுச்சிமிக்க துஆக்களின் தூண்டுதலினால், விண்ணில் ஏற்படுகின்ற அதிபயங்கர சத்தத்தினால் இறைவனின் அடையாளங்கள் பூமியில் மழையைப் போன்று பொழிகின்றன. மேலும் மகத்தான வழக்கத்திற்கு மாற்றமான அற்புதங்கள் உலகிலுள்ள மக்களுக்கு காட்டப்படுகின்றது. அவற்றின் மூலமாக இறைவன் இருக்கின்றான் என்பதை உலகம் கண்டு கொள்கின்றது. மேலும் இறைவனின் முகமும் தென்படுகின்றது. ஆனால், அந்த தூய நபி இந்த அளவு துஆ, மன்றாடுதல், (உலகிலிருந்து) விலகியிருப்பது ஆகியவற்றின் மூலமாக இறைவன் பக்கம் கவனம் செலுத்தாமல் இருந்திருந்தால், இறைவனது முகத்தின் ஒளியை உலகத்தின் மீது வெளிப்படுத்திக் காட்டுவதற்காக அவர் தியாகம் செய்யாமல் இருந்திருந்தால், ஒவ்வோர் அடி எடுத்து வைக்கும் போது நூற்றுக்கணக்கான மரணங்களை ஏற்றுக் கொள்ளாமல் இருந்திருந்தால் பிறகு இறைவனின் முகம் உலகத்தின் மீது ஒருபோதும் வெளிப்பட்டிருக்காது.

(ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 114-117)

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 99448-03650
SUB EDITOR
RAFEEQ AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

Title Code: PUNTAM00001
The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Vol. 1 Thursday 21 APRIL 2016 Issue No. 7

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
Tel. : +91 1872-224757
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

# முக்கிய அறிவிப்பு

## தேசிய மொழியான இந்தியிலும் ஐந்து மாநில மொழிகளிலும் பதர் பத்திரிகையின் தொடக்கம்

2016-ஆம் ஆண்டு மார்ச் 14-ஆம் தேதி காதியானிலுள்ள தலைமையக நூலகத்தில் அந்தந்த பகுதிகளுக்கான பத்ர் பத்திரிகை தொடங்கப்படுவதற்கு சிறப்பு நிகழ்ச்சி நாஸில் அஃலா மற்றும் அஹ்மதிய்யா ஜமாஅத் காதியானின் அமீருமான மதிப்பிற்குரிய மவ்லானா முஹம்மது இனாம் கவ்ரி சாஹிப் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக சத்ர் அஞ்சுமன் காதியானின் தலைவரான மதிப்பிற்குரிய மவ்லானா ஜலாலுத்தீன் சாஹிப் நய்யர் அவர்கள் கலந்து கொண்டார்கள். மேலும் அந்நூர் இஷாஅத் போர்டு காதியானின் தலைவரான மதிப்பிற்குரிய ஹாஃபிஸ் மக்தூம் ஷரீஃப் சாஹிப் அவர்களும், சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் நாஸிர்களும், நாஸிம்களும், வகீல்களும், பல்வேறு துறைகளின் அதிகாரிகளும் பத்ர் பத்திரிகையின் ஆசிரியர்களும் இந்நிகழ்ச்சிக்கு வருகை தந்திருந்தனர்.

ஹாஃபிஸ் ஸய்யிது ரசூல் நியாஸ் சாஹிப் அவர்கள் திருக்குர்ஆன் ஓதினார்கள். அதற்குப் பிறகு பத்ர் பத்திரிகையின் மேனேஜரான காரி நவாப் அஹ்மது சாஹிப் அவர்கள் அறிமுக சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். தமது சொற்பொழிவில் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

இன்று மிகவும் மகிழ்ச்சிக்குரிய நாளாகும். அதாவது, நாம் தேசிய மொழியான இந்தியிலும், ஒடியா, வங்காளம், தமிழ், தெலுங்கு, மலையாளம் ஆகிய ஐந்து மாநில மொழிகளிலும் பத்ர் பத்திரிகை தொடங்கப்படுவதையொட்டி நடைபெறுகின்ற சிறப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கிறோம். பத்ர் பத்திரிகை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் தொடங்கப்பட்டதாகும். மேலும் ஹுஸூர் (அலை) அவர்கள் அதனை தனது கை என்று குறிப்பிட்டுக் கூறியுள்ளார்கள். இதன் மூலமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கட்டளைகள், இல்ஹாம்கள், போதனைகள் விரைவாக சகோதரர்களைச் சென்றடைகின்றது. இந்தியா பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு மிகவும் இக்கட்டான நிலைமையில் பத்ர் பத்திரிகை மீண்டும் தொடங்கப்பட்டது. கல்வி, தர்பிய்யத், தப்லீக் ஆகியவற்றின் அடிப்படையில் பத்ர் பத்திரிகையின் தொண்டுகள் ஒளிமயமானதாகவும் வெளிப்படையாகவும் இருக்கின்றன. கலீஃபத்துல் மஸீஹின் குத்பாக்கள், சொற்பொழிவுகள், இறைஞான சபைகள், கட்டளைகள் ஆகியவற்றை பிறருக்கு எட்ட வைக்கின்ற ஒரே ஜமாஅத் பத்திரிகையாக இது திகழ்கின்றது. இதை தவிர இந்தியாவிலுள்ள ஜமாஅத் சகோதரர்களுக்கும் தலைமையகத்திற்கும் இடையில் தொடர்பை ஏற்படுத்தக் கூடியதாக இப்பத்திரிகை இருக்கின்றது. இப்பத்திரிகை இதுவரை உருது மொழியில் வெளி வந்ததால் உருது மொழி தெரியாத சகோதரர்கள் இத்தொடர்பிலிருந்தும் விலகி இருந்தனர். அவர்கள் இப்பத்திரிகையிலிருந்து பலன் பெற முடியாமல் இருந்து வந்தனர். எனவே, இதன் இந்தி பதிப்பு சுற்றறிக்கையின் வடிவில் முதலில் ஆரம்பிக்கப்பட்டது.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் பத்ர் பத்திரிகையின் மூலம் கிடைக்கின்ற பலனை விரிவானதாகவும் பொதுவானதாகவும் ஆக்குவதற்காக மிகுந்த பரிவுடன் இந்தியை தவிர இந்தியாவின் ஐந்து மாநில மொழிகளான ஒடியா, வங்காளம், தமிழ், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளில் இப்பத்திரிகையை வெளியிடுவதற்கான அனுமதியை வழங்கினார்கள். அரசாங்க அளவில் பத்திரிகையைப் பதிவு செய்வதற்கான பணிகள் நிறைவு பெற்ற பிறகு இப்போது அல்லாஹ்வின் அருளால் காதியானிலிருந்து இந்த பத்திரிகைகள் வெளிவர ஆரம்பித்திருக்கின்றன. அதன் தொடக்க நிகழ்ச்சி இன்று நடக்கின்றது. எந்த நோக்கத்திற்காக இந்த பத்திரிகைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றதோ அதை நாம் நிறைவேற்றுபவர்களாக நாம் இருப்பதற்கும் ஹுஸூர் அவர்களின் விருப்பத்திற்கேற்ப அதிலிருந்து பயன் பெறுபவர்களாக நாம் இருப்பதற்கும் நல்வாய்ப்பு கிடைப்பதற்கு நான் சகோதரர்களிடம் துஆ செய்யுமாறு வேண்டுகின்றேன்.

அதற்குப் பிறகு கூட்டத் தலைவர் அவர்கள் சிறப்பு விருந்தினரிடம் அந்தந்த பகுதி மொழிகளில் வெளி வருகின்ற பத்ர் பத்திரிகையின் இதழ்களை வழங்கி அதை பிறருக்கு தெரியும்படி காட்டவும் செய்தார்கள்.

இதற்குப் பிறகு அந்நூர் இஷாஅத் போர்டின் தலைவர் அவர்கள் சுருக்கமாக உரை நிகழ்த்தினார்கள். அல்லாஹ்விற்கு நாம் அதிகமாக நன்றி தெரிவிக்க வேண்டும். அவனது அருளால் பத்ர் பத்திரிகை ஏழு மொழிகளில் வெளிவந்து கொண்டிருக்கின்றது. ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இதன் வளர்ந்து வரும் தேவையைக் கருத்தில் கொண்டவாறும் உருது தெரியாத சகோதரர்கள் இதிலிருந்து விலகி இருப்பதன் காரணத்தாலும் அந்தந்த பகுதி மொழிகளில் இந்தப் பத்திரிகை வெளி வர வேண்டும் என்று கட்டளை பிறப்பித்தார்கள். ஒவ்வொரு கட்டத்திலும் துஆக்கள் செய்தவாறு எங்களுக்கு வழிகாட்டினார்கள் என்று அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்கள்.

இறுதியில் மதிப்பிற்குரிய நாஸிர் அஃலா சாஹிப் அவர்கள் தமது உரையில் இந்தப் பத்திரிகையின், தேவை முக்கியத்துவம், அருள்கள் ஆகியவற்றைக் குறிப்பிட்டவாறு இவ்வாறு கூறினார்கள்:

இன்றைய நாள் நமக்கு மகிழ்ச்சிக்குரிய நாளாகும். மேலும் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நாளாகும். பத்ர் பத்திரிகையை 7 மொழிகளில் காதியானிலிருந்து வெளியிடுவதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ளான். அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை நேர்வழியைப் பரப்புவதை நிறைவடையச் செய்வதற்காக அனுப்பினான். இஸ்லாத்தின் வெற்றிக்காக நூல்களை எழுதுவது, பிரசுரங்களை வெளியிடுவது ஆகிய பணிகளை எவ்வித வழிவகையும் இல்லாமலேயே தொடர்ச்சியாக அன்னார் செய்யத் தொடங்கினார்கள். அவர்கள் தன்னந்தனியாக இரவு பகலாக இந்தப் பணிகளில் ஈடுபட்டு வந்த அந்தக் காலம் நினைவில் கொள்ளத்தக்கதாகும். அவர்கள் சுயமே கட்டுரையை எழுதி விட்டு நன்கு எழுதுபவர் மூலமாக அதை எழுத வைப்பார்கள். அதைப் படித்துப் பார்த்த பிறகு அதனை அச்சிடுவார்கள். செலவு செய்ய முடியாத இக்கட்டான நிலையிலும் அவற்றை அதிகம் செலவு செய்து மற்றவர்கள் வரை கொண்டு சேர்ப்பார்கள். இன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தியாகத்தின் பலனாக எல்லா விதத்திலும் எளிதான நிலையை அல்லாஹ் ஏற்படுத்தியுள்ளான். எந்த விதையை அவர்கள் விதைத்தார்களோ அது இன்று முழு உலகிலும் பழங்களைத் தரக்கூடிய ஒரு மிகப்பெரும் மரமாக ஆகி விட்டது.

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுக்கு காதியான் மற்றும் இந்தியாவிலுள்ள ஜமாஅத் சகோதரர்களின் தர்பிய்யத் தொடர்பாக அதிகமாக கவலை இருக்கின்றது. இதற்காக அவர்கள் இரவு பகலாக துஆக்கள் செய்வதுடன் நமது வழிகாட்டுவதுடன் உதவியும் செய்து வருகின்றார்கள். எனவே, இதற்காக அந்தந்த பகுதிகளின் பல்வேறு மொழிகளின் *Desk* காதியானில் நிறுவப்பட்டது. அந்தந்த பகுதி மொழிகளில் பத்ர் பத்திரிகை வெளியிடப்பட்டது. நாம் ஹுஸூர் அவர்களின் உயர்வான எதிர்பார்ப்புகள் மற்றும் விருப்பத்திற்கேற்ப பணி செய்வதற்கு அல்லாஹ் நமக்கு நல்வாய்ப்பை வழங்குவானாக!

இறுதியில் கூட்டத்தின் தலைவர் கூட்டு துஆ செய்தார்கள்.

(தொகுப்பு : குரைஷி முஹம்மது ஃபஸ்லுல்லாஹ்,
துணை ஆசிரியர் பத்ர் பத்திரிகை, காதியான்)

### மறைவுச் செய்தி

மேலப்பாளையம் ஜமாஅத்தைச் சார்ந்த ஜனாப். A. அக்பர் அலி அஹ்மது சாஹிப் அவர்களின் மனைவி **H. ஹஸன் ஃபாத்திமா** சாஹிபா அவர்கள் 18.03.2016 அன்று வஃபாத்தானார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

அன்னார் உள்ளூர் லஜ்னா தலைவியாக கடந்த ஒரு வருட காலமாக தொண்டாற்றி வந்தார்கள். மேலும் ரஹ்மானிய்யா தொடக்கப் பள்ளியின் உதவித் தலைமை ஆசிரியையாகவும் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். இவர்களது மஃபிரத்திற்காக துஆ செய்ய வேண்டுகிறேன்.

– ஆசிரியர்

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar, at Fazle-Umar Printing Press Qadian, Harchowal Road, Qadian
Distt: Gurdaspur-143516, Punjab, India. And published at office of the Weekly Badar Moh-Ahmadiyya, Harchowal Road P.o:Qadian Distt:Gsp-143516, Punjab.India.Editor: Muzzammil Ahmad